www.padippakam.com

# நவசகாப்தம்



பாட்டாளிவர்க்க முன்னணியினர் கழகம் இலங்கை PROVO

## "நாம் வாழும் வரை போராடுவோம்"




### தோழர் சத்தியனுக்கு வீரஅஞ்சலி

தோழர்களின் மரணங்கள்
புரட்சியின் வித்துக்கள்
அந்த வீரர்களான
எம் தோழர்கள்
மீண்டும் மக்களிடம்
மலர்வார்கள்
அலையலையாய் வருவார்கள்....
நிலை குலையாது
மலை போல் நிற்பார்கள்....

அதிகார வெறியர்களே!
உங்களுக்கு இறுதி எச்சரிக்கை!

இதழ் 5

## இலங்கை சிங்கள இனவாத அரசு, 'இந்தி'ய விரிவாதிக்க அரசு, உள்நாட்டு எதிர்ப்புரட்சி கும்பல்கள், மற்றும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக

★ மார்க்சிய - லெனினிய - மாவோயிச சமூக விஞ்ஞான சிந்தனைப் பாதையில்......
★ தமிழீழ மக்களின் ஆயுதந்தாங்கிய தேசிய சுதந்திர போரை தொடர்வோம்.
★ மலையக முஸ்லீம் சிறு பான்மை மக்களின் சுயாட்சியுரிமைகளுக்காக போராடுவோம்
★ சிறீலங்காவில் இதை அங்கிகரித்து நிற்கும் சிங்கள மக்களுடன் இணைந்து போராடுவோம்.
★ இலங்கை மக்களின் புதிய சனநாயக புரட்சியை முன்னெடுத்து செல்வோம்.
★ புரட்சியாளர்களே! தேசபக்த சனநாயக சக்திகளே! ஒன்று திரள்வோம் ஓரணியாவோம்.
★ சர்வதேச மக்களுடன், புரட்சிகர மக்கள் அமைப்புக்களுடன் கைகோர்த்து நிற்போம்.

பண்பான வாசகர்களே!

இவ்வெளியீடு இனவாத அரசினதும், அராஜக இயக்கங்களதும் கடுமையான கெடுபிடிகளுக்கு மத்தியில் வெளி வருகிறது பலவகை நெருக்குதலை தாண்டி உங்கள் கைகளில் நிற்கும் 'நவசகாப்தம்' இதழை புதிய தோழமை நெஞ்சங்களின் கைகளிலும் தவழச்செய்யுங்கள், மனமுவந்து ஆலோசனைகள், விமர்சனங்கள், அன்பளிப்புகள் வழியாக அடுத்த வெளியீட்டுக்கு உதவுங்கள்.

PROLETARIAT VANGUARD'S ORGANIZATION

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தோழர் சத்தியனுக்கு எங்கள் வீரவணக்கம்

இலங்கை சிங்கள பௌத்த பேரினவாத அரசின்-
தமிழின அழிப்புக்கு எதிராக தமிழீழ மக்களின் சுயநிர்ணய
உரிமைக்கான ஆயுதம்தாங்கிய தேசிய விடுதலைப்போராட்டத்
திற்கு தங்கள் வாழ்வை மக்களின் விடுதலைத்தீயை
வளர்க்க அர்ப்பணித்த ஆயிரக்கணக்கான நெஞ்சங்களில்
அரசப்படைகளால் அழிக்கப்பட்டது போக, மீதங்கள்
அனைத்தும் எங்கள் முன்னிற்கும் "வழிதவறிய கொலைக்
கார தலைமைகளால்" அழிக்கப்பட்டது, அழிக்கப்பட்டு
வருவது எமது வரலாற்றில் ஊன்றி எழுதப்பட்டு வரு
கிறது. அந்த வழிதவறிய கொலைக்கார தலைமை
களின் சதிப் போர் பாதையை மக்கள் முன் அம்பலப்
படுத்தி சரியான மக்கள்யுத்த பாதையை உருவாக்கி
வழிதிறந்து விடும் ஒவ்வொரு புரட்சி அமைப்பும் தடை
செய்யப்படுவதும் முன்னணி ஊழியர்கள் கோரமாக
கொலை செய்யப்படுவதும் எல்லாவித நவீன ஆயுதங்
களுக்கும் தெரியும். இதில் அரசுபயங்கரவாதிகளும்
சிறுமுதலாளிய சுத்த இராணுவ அராஜக தலைமைகளும்
ஒரு அச்சில் வார்க்கப் பட்டிருக்கிறார்கள் என்பது
ஒன்றும் இரகசியமல்ல மக்களுக்கு.

இலங்கையின் நவீனக் கொலை வரலாற்றில்
தோழர் சத்தியனின் வீரமரணமும் ஒரு பெரும்
மைல்கல்லாகும். இனவாத அரசுக்கும் படைகளுக்கும்
எதிரான தமிழீழ மக்களது போராட்டத்தில் முல்லைத்தீவு,
கிளிநொச்சி மாவட்ட மக்களின் மத்தியில் ஒரு பிரபல்ய
மான முன்னணி போராளியாக மக்கள் நலன் சார்ந்த
நடவடிக்கைகளால் திகழ்ந்தவர். தோழர் சத்தியன், தான்
சார்ந்திருந்த PLOT அமைப்பின் தொழிற்சங்க வெகு
சன வேலைகள் மூலம் தொழிலாள விவசாயப் பிரிவு
மக்களின் ஏழ்மை வாழ்விலும் அவர்களது உறுதியான
போராட்டங்களிலும் ஒன்றுகலந்திருந்தவர். தமிழீழ
மக்களின் போராட்டத்தை ஆதரித்து நின்ற சிங்கள
மக்கள் மத்தியிலுள்ள போராட்ட சக்திகளுடன் நெருங்கிய
தொடர்பு வைத்து இலங்கைமக்களின் பாட்டாளி வர்க்க
புரட்சிக்கு நிபந்தனையான பல சனநாயகப் போராட்ட
கடமைகளில் பங்கு வகித்ததின் மூலம் மற்ற ஏனைய
போராட்ட முனைகளிலும் அறியப்பட்டவர்.

தமிழீழப் பகுதிகளில் உள்ள சிறுமுதலாளிய
சுத்த இராணுவ பாதை இயக்க தலைமைகள் வெளியக்
கத்திலும் சகஇயக்கங்கள் மேலும் மக்கள் மத்தியிலும்
தங்கள் அராஜக செய்கைகளை கட்டவிழ்த்த போது
மக்கள் சக்தியிலும் சனநாயகத்திலும் நம்பிக்கை-
கொண்டு துணிவுடன் இயக்க அராஜகங்களுக்கு எதிராக

படிப்பகம்

www.padippakam.com

.. குரல் கொடுத்து மக்கள் ஜனநாயகத்தின் பக்கம் நின்ற அராஜக எதிர்ப்பாளன். PLOT இயக்கத் தலைமை உட்படுகொலைகள் மக்கள் மீதான அராஜக அணுகுமுறை கள் செயலற்ற தன்மைகளால் சிதைந்து சிதறிய போதும் கூட தோழர் சத்தியன் தான் வேலை செய்த மக்கள் பகுதியில் அவ்வியக்கமும் அதன் தலைமையும் நிராகரிக்க பட்டபோதும் அந்த தோழர் அம் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக தொடர்ந்து துலங்கும் அளவிற்கு மக்களின் உரிமைகளுக்காக மக்களுடன் ஐக்கியப்பட்டிருந்தார். அம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தார். PLOT இயக்கத்தை விட்டு வெளியேறினார்.

"தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டம் இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் சிறுமுதலாளி வர்க்க தத் துவ இயக்கங்களால் சந்தர்ப்பவாத மார்க்சிய இயக் கங்களால் முன்னெடுக்கப்பட்டு வெற்றிகொள்வது இனி சாத்தியமில்லை" [சக தோழர்களுடன்] நடைமுறை என்பதை புரிந்துக் கொண்ட தோழர் சத்தியன் பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகத்தின் உறுப்பினராகி நின்று உழைத்தவர். இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த் தும் இந்திய ஆக்கிரமிப்பு படையை எதிர்த்தும் தமிழீழ விடுதலை இயக்க தலைமைகளை அம்பலப்படுத்தியும் நின்ற ஆக்கிரமிப்பு எதிர்ப்பு புரட்சியாளன்.

கொலைவெறியிலும் அராஜகத்திலும் வளர்ந்த "பிணம்" தின்னிகளான வழிதவறிய தலைமைகள் இலங்கை அரசுடன் கூட்டுசேர்ந்து செயற்பட்ட துரோக தலைமைகள் அந்த மக்கள் வீரனுடன் நேருக்கு நேர் மோதமுடியாது சூழ்ச்சியிலும் மடக்கி கொடூரமான சித்திரவதைக்கு பின்னர் அவனது கொள்கைமாறாத உயிரையும் உடலையும் அழித்து விட்டனர்.

இந்த கொலைகார தலைமைகள் போராட்டத்தின் பெயரால் தமிழீழ "தாகத்தின்" பெயரில் செய்த நூற்றுக்கணக் கான கொலைகளுக்கு, வெட்டி புதைத்தல்களுக்கு பின்பும் தாங்கள் பிழைத்தின்று உயிர்வாழவும் போர்ப் பிழைப்பு நடத்தியும் வருகிறார்கள். இந்த மக்கள் விரோதிகள் மக்களின் உண்மையான போராட்ட வீரர்களை தொடர்ந்தும் அழிப் பார்களானால் இன்றே மக்களிடமிருந்து எவ்வாவகையிலும் அன்னியப்பட்டு நிற்கும் இந்த 'சதிகும்பல்' கூட்டம் இனி மக்களால் நேரடியாக துப்புரவு செய்யப்படுவார்கள் என்பதை அறிய வேண்டும்.

'உயிரிழந்த தோழர்களுக்காக நாங்கள் பழிவாங்க போவதில்லை', என்ற பிடல் காஸ்ரோவின் குறிப்புக்களை மேடைக்கு மேடை கூறி பின்னால் கொலைவெறித்தாண் டவமாடும் அராஜகவாதிகளே! உங்களுக்கு இறுதி எச் சரிக்கை உயிரிழந்த தோழர்களுக்காக நாங்களும் உங் களை பழிவாங்க போவதில்லை. ஆனால்..
உயிரிழந்த எமது தோழர்களின் விடுதலை கனவை, மக்கள் சுதந்திரத்தை நனவாக்க போராடும் தோழர்களை நீங்கள் மீண்டும் தாக்கினால் தற்காக்க இனி பதிலடி கொடுப்போம் என்பது மட்டும் நிச்சயம்.

படிப்பகம்

www.padippakam.com

தோழர் சத்தியனின் எதிர்பாரா மரணத்தால் பரிதவித்து நிற்கும் அவரது தாய்தந்தையர் சகோதரர்கட்கும் உறவினர்க்கும் தோழரின் பொதுநல சேவையால் தெம்பு பெற்று வந்த அப்பகுதி மக்கட்கும்.. பாட்டாளிவர்க்க முன்னணியினர் கழகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

மக்களது உரிமைகளுக்காக, நல்வாழ்விற்காக-விடுதலைக்காக உயிரிழந்த தோழர் சத்தியனுக்கு நாங்கள் செலுத்தும் வீரவணக்கம் என்பது மக்களுக்கு அவர்களின் எதிரிகளை மேலும் இனங்காட்டி உரிமையை வெல்ல மக்களுடன் இணைந்து நின்று இறுதிவரை போராடுவதேயாகும்.

பாட்டாளிவர்க்கமுன்னணியினர் கழகம்,
இலங்கை.

## புலிகளால் சிறைவைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்யுமாறு வேண்டுகிறோம்.

- தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பிரதேசங்களில் இருந்து பலநூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் புலிகளால் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளனர். பல அமைப்புகளில் இருந்தும் இயங்கி இருந்தவர்களும் மற்றும் NLFT-PLFT, தீப்பொறி தமிழ்மக்கள் பாதுகாப்பு பேரவை ஆகிய அமைப்புகளை சார்ந்த உறுப்பினர்களும் இவ்வாறு புலிகளால் கைதுசெய்யப்பட்டவர்களுள் அடங்குகின்றனர். பலர் திடீர் திடீரென காணாமல் போகின்ற சம்பவங்களும் அதிகரித்துள்ளது.
- எந்த ஒரு மனிதனுக்கும் தனது அரசியல் கருத்தை கூறவும் அதற்காக அமைப்புரீதியாக செயல்படவும் உரிமை உள்ளது. இந்த சனநாயக உரிமைக்கு புலிகள் தொடர்ந்தும் மதிப்பளிக்காதுள்ளனர். புலிகளின் தொடர்ச்சியான இந்த நடவடிக்கையை மனித உரிமைகளுக்கான இலங்கையர்கள் கண்டனம் செய்கிறோம்.
- வேறுபட்ட அரசியல் கருத்துக்களுக்காக புலிகளின் சிறைகளில் அடைத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படும் இளைஞர்களையும் மற்றும் வேறு காரணங்களுக்காக அநீதியான முறையில் புலிகளால் சிறைவைக்கப்பட்டுள்ள பொதுமக்களையும் விடுவிக்க வேண்டுகிறோம். சனநாயக பண்புகளை மதிக்கும் அனைவரும் இவற்றுக்காக குரல் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மனித உரிமைகளுக்கான இலங்கையர்கள்.
கனடா

— நன்றி —

படிப்பகம்

www.padippakam.com

# தடைகளைத் தகர்த்து முன்னேறுவோம்!

இலங்கை மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு விடுதலைக்காக தமிழ் தேசிய இன மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காகவும், தேசத்து அனைத்து உழைக்கும் மக்களும் ஓரணியில் நின்று போராட வேண்டும். அதற்கு அவர்களுக்கிடையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இன, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகளின் ஆதிக்க தன்மையில் இருந்து அவர்களை விடுவித்தாக வேண்டும். இத்தகைய மக்களை பிளவுபடுத்தும் வேறுபாடுகளை ஆதிக்க வெறி கருத்தியலை மூட நம்பிக்கைகளை எதிர்த்து கருத்தியல் ரீதியாக முறியடிக்க வேண்டும். இவற்றை ஊட்டி வளர்க்கும் பிற்போக்கு வர்க்கங்களையும் அவற்றின் பிரதிநிதிகளாக இயங்கும் சீரழிந்த அரசியல் கட்சிகளையும் மாற்றுப் பேர்வழி சமூக நிறுவனங்களையும் எதிர்த்து போராடியாக வேண்டும். இந்த அடிப்படையை புரியாத அல்லது இந்த வேறுபாடுகளை அகற்ற நடைமுறையில் பங்காற்றாத எந்த தனிமனிதர்களும் சரி சமூக இயக்கங்களும் தமது இலட்சியத்தையும் கொள்கைகளையும் வெறும் கனவுகளாகவே அடையாளம் காண வேண்டியிருக்கும். எனவே உண்மையான சமூக மாற்றத்திற்கான பற்றுடன் தமிழீழ தேசிய இன மக்களின் விடிவுக்கான இலட்சிய நினைவுகளுடன் தமிழீழப் பகுதியில் இயங்கும் முற்போக்கு சக்திகள் தமது பலங்களுக்கு ஒப்ப தாங்கள் தாங்கள் இயங்கக்கூடிய முனைகளில் இலங்கையின் இன்றைய அரசியல் - இராணுவ நிலைமைகளைக் கணக்கில் கொண்டு திட்டமிட்ட முறையில் ஆரோக்கியமாக செயற்படுவதன் மூலம் இலங்கை மக்களின் புதிய ஜனநாயகப் புரட்சியை சாதிக்க முடியும். தமிழீழ தேசிய இன மக்களின் சுயநிர்ணய உரிமைகளை உறுதி செய்து கொள்ள முடியும். முஸ்லீம், மலையக மக்களின் அடிப்படை வாழ்வுக் கோரிக்கைகளை நிலைநிறுத்த முடியும்.

இலங்கை சிங்கள இனவாத அரசின் இனஒடுக்குமுறைக்கும் படுகொலைக்கும் எதிராக தமிழீழ தேசிய இன மக்கள் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக நடத்தி வரும் போராட்டம் அரசுக்கெதிரான ஏனைய போராட்ட முனைகளான சிங்கள மக்களின் போராட்ட முனை, மலையக மக்களின் போராட்ட முனை இவற்றுடன் ஒப்பிடும் இடத்து தனித்துவ உள்ளடக்கங்களுடனும் பார்க்கையில் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் இனவாத அரசுக்கெதிரான, ஏகாதிபத்தியத்துக்கெதிரான பிரதான போராட்ட முனையாக இருந்து வருகிறது. தமிழ் மக்களின் போராட்ட முனையில் இருந்து போராடும் பாட்டாளி வர்க்கத்தின் சக்திகள் இன்று நெருக்கடியான காலகட்டத்தை கடக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இந்த நெருக்கடியில் இருந்து புரட்சிகர சக்திகள் மீண்டும் (சித்தாந்த ரீதியிலும், அமைப்பு ரீதியிலும் வெகுஜனங்கள் மத்தியில் நிலைகொள்வதிலும்) தம்மைத் தற்காத்துக் கொள்ளத் தவறினால், இலங்கை மக்களின் புதிய ஜனநாயகப் புரட்சி போராட்டத்திலும்

படிப்பகம்

www.padippakam.com

தமிழீழ மக்களின் சுயநிர்ணயப் போராட்டம், தமிழ் மக்களின் சமூக விடுதலையிலும், தமிழீழ பெரும்பான்மை உழைக்கும் மக்களின் உன்னதமான பங்கை, செயற்திறன் மிக்க சக்தியை நமது வரலாறு பெற நீண்டகாலம் எடுக்கும். இன்று இந்தப் பெரும்பான்மையை உழைக்கும் மக்களின் நல்வாழ்வுக்காக, தேசிய இனங்களின் சுதந்திரத்திற்காக நிற்கும் போராட்ட வீரர்கள் யாவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

தமிழீழ மக்களின் போராட்ட முனையில் இருந்து இயங்கும் புரட்சிகர குழுக்கள், அக்குழுக்களிலுள்ள தோழர்கள் முகம் கொடுக்கும் முதலாவது நெருக்கடி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டாலும் ஈடுபடாவிட்டாலும் இயங்கினாலும், இயங்காவிட்டாலும் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து விட வேண்டும் அல்லது விடுதலைப் புலிகளின் தனி இயக்க இராணுவ சர்வாதிகார வெறியின் சித்திரவதைக்கும் படுகொலைக்கும் பலியாக வேண்டும். கடந்த காலங்களில் இதனைப் போன்ற சக இயக்கங்களை அழிப்பது, தடை செய்வது இதன் மூலம் போர்ப் பகுதிகளில் தனது தனி இயக்க அரசு அதிகாரத்தை நிலை நிறுத்திய விடுதலைப் புலிகளின் பாசிச வெறி அனைத்து முற்போக்கு சக்திகளாலும் கண்டனம் செய்யப்பட்டது நினைவு கொள்ளத் தக்கது. ஆனால் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பின் சரணாகதி அரசியலுக்கும் பாராளுமன்றப் பாதைக்கும் சென்று விட்ட மற்றைய இயக்கங்களான EPRLF, EROS, PLOT, TELO, ENDLF, EPDP இன் தலைமைகளின் தவறிய பாதைகளின் விளைவு தமிழீழ மக்களின் விடுதலைக்கு ஆதரவாகவும், LTTE இன் இயக்க அழிப்புக்கு எதிராகவும் குரல் கொடுத்த பல ஜனநாயக முற்போக்கு சக்திகளை தேசிய அளவிலும் சர்வதேசிய அளவிலும் நிலை தடுமாற வைத்துள்ளது. ஆயுதப் போராட்டத்தின் அன்றாட நிகழ்ச்சிகளில் LTTE இன் துப்பாக்கிகளே சிறிலங்கா அரசை எதிர்த்து குண்டுகளை வெளியிடுகிறது என்ற ஒருவகை அம்சத்தால் LTTE இன் சக இயக்க அழிப்பு எதிர்ப்பு குரல்கள் தழுதழுக்கின்றது. தட்டி விட்டால் LTTE இன் சக இயக்க அழிப்புக்களை கூட நியாயப்படுத்துகிறது. போராட்டப் போக்கின் இந்த இக்கட்டான மாற்ற காலகட்டத்திலிருக்கும் புரட்சிகர சக்திகள் அரச பயங்கரவாதிகளதும், அராஜக இயக்கத் தலைமைகளின் எல்லாத் திமிருக்கும் எதிரே நின்று முன்னேற வேண்டியிருக்கின்றது. இந்தக் காலகட்டத்தில் முன்னேறுவது என்பது அங்குலம் அங்குலமாக காலடிகளை தூக்கி வைப்பதன் மூலம் மூடப்பட்டிருக்கும் மக்களது போராட்ட மடைகளைத் திறப்பதற்கு எதிரிகளுக்கு இடையிலான முரண்பாட்டை அக்குவேறு ஆணிவேறாக புரிந்து பயன்படுத்துவது புரட்சிகர அரசியல் - இராணுவ பாதையில் ஊன்றி நின்று ஐக்கிய முன்னணி விசயத்தில் சிரத்தையைப் பெற்று நடப்பது. இவற்றில் எந்தக் குழு தனது பலம், எதிரிகளின் பலயீனம், தனது பலயீனம், எதிரிகளது பலங்களை கணித்து செயல்படுமோ அதுதான் அடுத்த கட்டத்துக்கு நகர்வதில் வெற்றியைப் பெற முடியும் இல்லையேல் தோல்வி நிச்சயமானது.

> "பிரச்சினைகள் குவிந்து, தொல்லைகள் பெருகும் வரை காத்திராமல், அவற்றைத் தீர்க்க வேண்டும். தலைவர்கள் எப்போதும் இயக்கத்தின் முன்னணியில் செல்ல வேண்டுமே அன்றி, பின்தங்கி நிற்கக் கூடாது." (தோழர் மாவோ)

படிப்பகம்

www.padippakam.com


இலங்கை சமூகத்தின் விடுதலைக்கும் தமிழ் இனத்தின் சுதந்திரத்திற்குமாக போராடி வாழ்வும், மரணத்தை தழுவியும் திரும்பி இலட்சியத்திற்காக நிற்கும் தோழர்களே! சக அமைப்புக்களே! நாம் முகம் கொடுத்துள்ள நிலைமையை உடைத்தாக வேண்டும். ஒன்று LTTE இனதும் மற்றைய அரசாங்க துரோக இயக்கங்களாதும் தடைவிதிப்பு, கைது, அழிப்பு இதற்கு முகம் கொடுத்தல். இரண்டு ஒவ்வொரு குழுவும் தான் புரிந்து கொண்டுள்ள, முன்வைத்துள்ள அரசியலைக் கூட முன்னெடுத்துச் செல்ல முடியாதளவிற்கு இயங்கும் திறனற்ற நிலைமைகளாலும் தியாகத் தன்மையற்ற வழிகாட்டிகளாலும் உள்ளணிகளே சிதறுண்டு போய்க்கொண்டிருக்கும் நிலை இது இத்துடன் நிற்காது, நிற்கவுமில்லை. பதில் மேலும் பல சீரற்ற உள் நிலைமைகளை தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது. இவையும் குழுக்களின் அகநிலையிலுள்ள அரசியல் - இராணுவ அமைப்பு பற்றிய பார்வைகளின் போதாமையும் ஸ்திரமின்மையும் செயற்பாடு போக்கிலுள்ள அதிகளவிலான பலயீனங்களும் இன்று சேர்ந்து உள்ளேயே அரிக்கத் துவங்கியுள்ள ஒரு நிலையில் இக்குழுக்களும் நபர்களும் புறநிலையில் எதிரிகளின் கொடுமையான அடக்கு முறைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால் முகம் கொடுக்கமுடியவில்லை. ஒருபக்கம் எதிரிகளை பொறுத்து வரை தாங்கள் அடக்கு முறையை புரட்சிகர குழுக்கள் மீது கட்டவிழ்த்து விட வேண்டிய நிலைக்கு அவர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவின் பலயீனம் நிர்ப்பந்திக்கிறது. அதேவேளை மக்களுக்காக நிற்கும் புரட்சிகரக் குழுக்கள் அகநிலையில் அமைப்பு அளவில் பலயீனமாக இருப்பது எதிரிகளுக்கு பலமாக அமைந்து இருக்கிறது. மறுபக்கம் நம்மைப் பொறுத்த வரை மோசமான அடக்கு முறைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. காரணம் மக்களுக்கும் நமக்கும் இடையிலான உறவின் பலம் தான். ஆனால் மக்களிடம் அந்நியப்பட்டு போய்யுள்ள - போய்க்கொண்டிருப்பவர்கள் ஏதோ ஒரு வழியில் அகநிலையில் பலமாக இருக்கின்றார்கள். நாம் அகநிலையிலும் பலயீனமாக இருக்கின்றோம் என்ற முரண்பாடுகளின் இயக்கப் போக்கில் இருந்து நமது நிகழ்காலமும் எதிர்காலமும் தீர்மானிக்கப் படப்போகிறது.

இன்றுள்ள நிலைமையை அணுகுவதிலும் இந்த முரண்பாடுகளைக் கையாள்வதிலும் குழுக்களின் வழிகாட்டிகள் மத்தியில் காணப்படும் சில போக்குகளை சுட்டிக் காட்டுவதும் எச்சரிப்பதும் அவசியம் என நினைக்கிறோம். தமிழீழப் பகுதிகளில் புரட்சிகரக் குழுக்களும் தோழர்களும் LTTE இனால் (பிரதானமாக) அடக்கு முறைக்குள்ளாக்கப்படுகிறது. (கைது, சித்திரவதை, கொலை, தடைவிதிப்பு) இதை முகம் கொடுக்கும் விதத்தில் -

அ) இலங்கையில் குறிப்பாக தமிழீழப் பகுதிகளில் அரசியல் - இராணுவ ரீதியாக இன்றுள்ள நிலைமையின் பொதுத் தன்மையை பார்த்து, அதில் LTTE இன் பங்கை முழுதாக சரியானதாக முன்வைத்து கொள்கிற போதிலும் தமது அகநிலை அமைப்பு நெருக்கடிகளுக்கு, சிக்கல்களுக்கு தீர்வை தேடமுடியாமல், அடக்கு முறைக்கு முகம் கொடுக்க கூடிய வழியில் புரட்சிகர அமைப்பை -

படிப்பகம்

www.padippakam.com



தயார் செய்து கொள்வது என்பதற்குப் பதில் LTTE யின் இன்றைய அணு நீண்ட பார்வையற்ற இலங்கை-இந்திய அரசு எதிர்ப்பு என்பதை முன் காட்டி அதனுடன் நிபந்தனைகள் இன்றி பின்னால் புரட்சிகர இயக்கத்தை கட்டி இழுக்க நினைக்கும் சமரசப் போக்கு ஒருவகை,

ஆ) இலங்கையில் நிலவும் அரசியல் - இராணுவ நிலைமைகளையும் தமிழீழப் பிரதேசங்களில் LTTE இன் ஆரோக்கியமற்ற பங்கை நன்றாக கவனிக்கின்ற போதிலும் தமது அமைப்பு அகநிலை நெருக்கடிகள் தேக்கங்களுக்கு தீர்வைத் தேடாது அல்லது அதை சடங்காக கணித்து விளையாட்டங்களுடன் அடக்குமுறைக்கு முகம் கொடுக்கக்கூடிய அமைப்பு வடிவங்களை தோழர்களின் மனநிலை வாழ்வுகளை தயார் செய்யாது / எதிரிகளுக்கிடையிலான முரண்பாட்டை பயன்படுத்துவது என்ற பெயரில் அரசு கைக்கூலிகளுடனும் இனத்துரோகிகளுடனும் ஒரு உடன்பாட்டிற்கு வருவதன் மூலம் புரட்சிகரக் குழுக்கள் முகம் கொடுக்கும் உடனடி நெருக்கடியை தீர்க்கலாம் என நினைக்கும் சரணாகதிப் போக்கு இது மக்களுக்கும் நமக்கும் இடையிலான உறவு பலத்தை சிதைத்து விடும் என்பதையும் நமது அடிப்படை பலத்தை சிதைத்தும் அகநிலை பலயீனத்தை மேலும் கூட்டும் என்பதையும் புரியாததன் விளைவு இது இரண்டாவது வகை.

இ) இன்றுள்ள அரசியல் - இராணுவ நிலைமைகள் போராட்டக்களத்தில் உள்ள சக்திகளை பற்றிய மதிப்பு LTTE இன் பொதுப் போராட்டத்திற்கு சாதகமான பாதகமான பக்கங்கள், புரட்சிகர சக்திகளின் ஐக்கியம் ஒருங்கிணைப்பு, வளர்ச்சி நிலை புரட்சிகர குழுக்கள் புறநிலையில் முகங் கொடுக்க வேண்டியுள்ள நெருக்கடி அகநிலையிலுள்ள தேக்கங்களை உடைக்கும் வழிகள் ஒழுங்குகள் பற்றிய புரிதலுடன் முகங்கொடுக்க வேண்டிய நெருக்கடிகளில் சில தவிர்க்க முடியாத இழப்புகளுடன் அடக்குமுறையாளர்களைப் பற்றிய மேலும் அதிகமான அம்பலப் படுத்தல்கள் மூலம் மக்களுடன் மேலும் மேலும் ஐக்கியப்படுவது புரட்சிகர அரசியலை முதன்மையாக வைத்து அமைப்பு வேலை முறைகளை கட்டுவது, தோழர்களை நீண்ட கால பார்வைகளுடன் தயார் செய்வதன் மூலம் குறைந்த இழப்புக்களுடன் எல்லா நெருக்கடிகளையும் திருத்துக் கொண்டு புரட்சிகர பாட்டாளி வர்க்க இயக்கத்தின் தனித்தன்மையுடன் கூடிய, பொது எதிரிகளுக்கு எதிராக முன்னேறுவது என்ற போக்கு, இது மூன்றாவது வகையாகும்.

ஆகவே நமக்கு தேவையானது எல்லாம் மக்களுக்கும் நமக்கும் இடையிலான உறவுப் பலம் தொடர்ந்து இருக்கவும் வளர்க்கவும் வேண்டிய அதே வேளை வேகமாக மாறிவரும் இன்றைய அரசியல் - இராணுவ நிலைமைகளைப் பற்றி அச்சொட்டான விரிந்த பார்வைகளும் உரிய அரங்க செயற்பாடுகளும் தேவை. இதுவரை அமைப்புள் இருந்து வரும் தேக்க நிலையை எல்லாத் துறைகளிலும் எல்லா அரங்கங்களிலும் உடைத்தாக வேண்டும்.

—

படிப்பகம்

www.padippakam.com



அது செயலற்ற வழிகாட்டிகளையும் பயந்து பதுங்கும் பாதை மாறிகளையும் சரணாகதி தலைமையையும் தூக்கியெறிவதாகக் கூட இருக்கலாம். இது சில திரிபுவாதிகளின் பலவீனங்களை அம்பலப்படுத்துவதிலும் பலங்களை சார்ந்து நிற்பதாகவும் விடை பெறலாம். இதுதான் இன்றைய சூழ்நிலைமைகளின் யதார்த்தம் நாம் செய்ய வேண்டியதும் இதுவே தான்.

"செயல் அதுதான் சிறந்த சொல்"

"ஆசிரியர் குழு"
- நவசகாப்தம் -

**பரிசீலனையும் படிப்பும்**

"அனுஷ்டானமான வேலையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் கீழ்மட்டங்களிலுள்ள நிலைமைகளைப் பரிசீலனை செய்ய வேண்டும். இத்தகைய பரிசீலனை விசேடமாக தத்துவத்தில் தேர்ச்சி பெற்ற, ஆனால் உண்மை நிலைமைகளை அறியாதவர்களைப் பொறுத்தவரையில் அவசியமானது. இல்லாவிட்டால் அவர்கள் தத்துவத்தை அனுஷ்டானத்துடன் இணைக்க இயலாதவர்கள் ஆவர் 'பரிசீலனை இன்றேல்', பேசும் உரிமை இல்லை என்ற என் கூற்று "குறுகிய அனுபவ வாதம்" என கேலி செய்யப்பட்ட போதிலும், இன்று வரையில் அதற்காக நான் வருந்தவில்லை. வருந்துவதற்கு பதில் பரிசீலனை இல்லாவிட்டால் பேசும் உரிமையும் இருக்கக் கூடாது. என்பதை நான் இன்னும் வலியுறுத்துகிறேன்" "உத்தியோக வண்டியில் வந்திறங்கிய அதே கணத்தில்", சந்தடி செய்து அபிப்பிராயங்களை அள்ளி வீசி அதை விமர்சித்து இதைக் கண்டிக்கும் நபர்களும் பலர் உண்டு. உண்மையில் இவர்கள் 'நூற்றுக்கு நூறும் தோல்வியைச் சந்திப்பது நிச்சயம். ஏனெனில் பூரணமான பரிசீலனையை அடிப்படையாக கொள்ளாத இத்தகைய பேச்சுக்களும் விமர்சனங்களும் அறியாமை நிரம்பிய பிதற்றல்கள் அன்றி வேறல்ல. இங்கும், அங்கும், எங்கும் ஓடித்திரியும் இந்த 'ராஜ தூதர்களால்' நமது கட்சி எண்ணற்ற தடவை பாதிக்கப்பட்டது.' புரட்சிகர அனுஷ்டானத்துடன் இணைக்கப்படாவிட்டால் தத்துவம் என்பது குறிக்கோள் அற்றதாகி விடும்". என்று ஸ்டாலின் அவர்கள் சரியாகக் கூறினார். தொடர்ந்து அவர் அனுஷ்டானம் புரட்சிகர தத்துவத்தால் நடைமுறைப் படுத்தப்படாவிட்டால் அது இருளில் கிடந்து தடுமாறும். என்றும் சரியாகக் கூறியுள்ளார். இருளில் அலைந்து திரிகின்ற எதிர்கால நோக்கும், தூரதிருஷ்டியும் இல்லாத, கூறப்படும் அனுஷ்டான வாதிகளுக்கு அன்றி வேறு யாருக்கும் குறுகிய அனுபவ வாதி என்ற முத்திரை குத்திக் கூடாது.

"கிராமிய பரிசீலனை"யின் முன்னுரையும் பின்னுரையும்
- தோழர் மாவோ -

படிப்பகம்

www.padippakam.com



பாட்டாளிவர்க்க முன்னணியினர் கழகத்தின்
இரண்டாவது பிளீனம் - 1991 மாசி மாதம் 15-ம்..
திகதியிலிருந்து 19-வரை நடைபெற்றது. வெற்றி-
கரமாக முடிந்த இப்பிளீனம் நமது அமைப்பின் வளர்ச்சி
பாதையில் மேலும் சரியான அரசியல் - இராணுவ பாதை
யும் அமைப்பு கட்டுமானத்தையும் நோக்கி இலங்கை
பாட்டாளிவர்க்க சக்திகள் ன்னேற வழிவகுத்துள்ளது.

பாட்டாளிவர்க்க முன்னணி ஏர் கழகத்தின் முதலாவது
பிளீனத்தில் வைக்கப்பட்டு ஏ, க்கொண்ட அரசியல் அறிக்-
கையின் உள்ளடக்கத்தில், நட வழிகாட்டும் தத்துவம் -
சர்வதேச நிலைப்பாடு - இந்திய வரிவாதிக்க அரசு பற்றியப்
பார்வை, இலங்கையின் சமூக அமைப்பு குறித்த வரையறுப்பு
இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துப் போக்குகள் நிலைப்
பாடுகள் அமைப்புளிருந்து வந்தது அனுமதிக்கப்பட்டிருந்தது.
கூட்டுகல்வி, வாதவிவாதம், ஆய்வு இவற்றினூடாக இப்-
பிளீனம் இவ்விஷயங்களில் ஒரு தெளிவான நிலைப்பாட்
டிற்கு வரவேண்டும் எனவும் கேட்டிருந்தது. இதன்படி
இரண்டாவது பிளீனம் மேற்குறித்த விசயங்களில் முதன்
மூன்று விசயங்களில் ஒரு தெளிவான நிலைபாட்டுக்கு
வந்துள்ளது. நாலாவது தலைப்பு தொடர்ந்தும் ஆய்வு-
விவாதங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தேசிய
இனப்பிரச்சினைப் பற்றிய பொதுப்பார்வைக் குறித்தும்,
நான்கு அம்சங்கள் மீதான இரண்டாவது பிளீனமுடிவு
கள் நீக்கி முதலாவது பிளீன அரசியல் அறிக்கையின்
ஏனைய உள்ளடக்க நிலைப்பாடுகள் அனைத்தும்
இப்பிளீனம் ஏற்றுக் கொண்டுள்ளது. (இரண்டாவது பிளீனத்
தின் விரிவான அறிக்கைகள் தனியே வெளியிடப்படுகிறது)

## இரண்டாவது பிளீனத்தின் முக்கிய முடிவுகள்.. 4

1. "பாட்டாளிவர்க்க முன்னணியினர் கழகம்" இது கருக்குழு
வின் கொள்கைக் கோட்பாடுகளை வேலைகளை செயற்
படுத்த முன் நிற்கும் அமைப்பு வடிவமாகும். இதனது
அதிகாரபூர்வ அரசியல் - இராணுவ வெளியீடு "நவசகாப்தம்"
ஆகும். இலங்கை சிங்கள இனவாத அரசுக்கும், இலங்கை
ஆளும் வர்க்கத்திற்கும், எதிரான தமிழீழ மக்களின் தேசிய
சுயநிர்ணய உரிமை போராட்ட முனை, மலையகமக்க
ளது போராட்டமுனை, சிங்கள மக்களது போராட்டமுனை
இம்மூன்று முனைகளிலும் உள்ள தேசபக்த புரட்சிகர பாட்டாளி
வர்க்க சக்திகள் தாங்கள் முகம் கொடுத்தும், சிக்கிக்
கொண்டும் உள்ள தடைகளை உடைத்து "ஒரு புரட்சிகர
பாட்டாளி வர்க்க கட்சியை" உருவாக்க வேண்டியதின் அவ
சியத்தை முன்வைத்து அதனை சாதிக்க எல்லாத்துறை
களிலும் செயற்படும் வரலாற்று அவசியத் தேவையை
உணர்ந்து செயற்படும் முற்போக்கு சனநாயக சக்திகளின்
செயற்படும் மையமாக விளங்கும்.

www.padippakam.com



அத்தகைய சக்திகளை இணைத்துக் கொள்ளும் அதேபோல் மூன்று முனைகளிலும் நமது எண்ணத்தின் இலட்சியத்தின் அடிப்படையில் செயற்படும் மையங்களுடன், அணிகளுடன் குழுக்களுடன், ஐக்கியப்பட்டு ஒன்றிணைந்து செயற்பட முழு அக்கறைக்காட்டும் இதில் பா.வ.மு.க முன்னோடியாக செயற்படும்.

2. இரண்டாவது பிளீனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளை முன்னிறுத்தி மூன்றாவது பிளீனத்தில் பா.வ.மு.க தனது விரிவான அரசியல் இராணுவக் கொள்கை திட்டத்தையும், செயல் திட்டத்தையும் முடிவுரைகளுடன் முன்வைக்கும், இதற்கான வேலைகளை அமைப்பின் அரசியல் தலைமைக்குழு பொறுப்புடன் செய்துமுடிக்கும்.

3. தமிழீழ தேசிய விடுதலைப் போரில் ஆயுதப் போராட்ட இதுவரைகால அனுபவங்களை மார்க்சிய-லெனினிய-மாவோ சிந்தனை ஒளியில் பார்த்துத் தொகுக்கப்பட்ட "அனுபவமும்-நமது பாதையும்" புதிய பரிந்துரைகளுடன் தலைமைக்குழுவினரால் அடுத்து வரும் விசேட கூட்டத்தில் முன்வைக்கப்படும். இதுவே தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தை உழைக்கும் மக்களின் தலைமையில் முன்னெடுக்கப்படும் புதிய பாதையை தெளிவுரைக்கும்.

4. பாட்டாளிவர்க்க முன்னணியினர் கழகத்தின் உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்த சச்சி (A.G. காந்தன்) முத்து (M.S) என்ற இருவர் அமைப்பின் அடிப்படை உறுப்பினர் தன்மையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். சச்சி தன்னார்வக்குழு நிதிநிறுவனங்களுடன் தொடர்புவைத்து பணம் பெற்று வந்தது கண்டுபிடிக்கப்பட்டதின் பேரிலும் முத்து தனது சொந்தத் தேவைகளுக்கு போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டதன் பேரிலும், அவை கண்டுப்பிடிக்கப்பட்டதன் அடிப்படையில் நீக்கப்பட்டுள்ளனர். (இவர்கள் தொடர்பான விளக்க அறிக்கை தனியாக வெளியிடப்பட்டுள்ளது)

## பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகத்தின் கடமைகள் - 7

1. இலங்கை மக்களின் புதிய ஜனநாயகப் புரட்சியை சாதிக்கவும் தமிழ், சிங்கள தேசிய இனங்களின், தேசங்களின் - சுதந்திர குடியரசுகளின் விருப்பத்துடன் கூடிய ஒன்றுபட்ட மக்கள் குடியரசை நிறுவவும், இலங்கையின் பிற்போக்கு ஆளும் வர்க்க இனவாத அரசையும் அவர்களை காபந்து செய்யும் இரு உலக வல்லரசுகளையும் குறிப்பாக அமெரிக்க பிரிட்டானிய ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து இலங்கை பாட்டாளிவர்க்கத்தின் தலைமையில் நீண்டகால மக்கள்யுத்த பாதையை ஏற்று மக்கள் திரள் வழியில் ஆயுத போராட்டத்தை பிரதான போராட்ட வடிவமாக அங்கீகரித்து மக்களின் இறுதி வெற்றிவரை போராடுவது உலகமக்கள் மற்றும் முற்போக்கு புரட்சிகர ஜனநாயக இயக்கங்களுடன் ஒன்று சேர்ந்து நிற்பது.

படிப்பகம்

www.padippakam.com



2. இலங்கை சிங்கள பௌத்த பேரினவாத அரசை எதிர்த்து தமிழீழ தேசிய இனமக்களின் பிரிந்துபோகும் உரிமையை உள்ளடக்கிய சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தை அங்கீகரித்து அப்போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுவது தமிழீழ மக்களின் உரிமைப்போரை ஏற்றுக் கொண்டு இயங்கும் புரட்சிகர அணிகள் அவை மலையகத்திலோ, சிங்கள மக்கள் மத்தியிலோ, இருந்தாலும் அவற்றுடன் ஒன்றிணைந்து செயற்படுவது. தமிழீழப்போராட்ட முனையிலுள்ள இதுபோன்ற புரட்சிகர சக்திகளுடன் ஒன்றிணைந்து செயற்பட உள்ள வாய்ப்புகளுக்கு முன் உரிமையும் முழுகவனமும் கொடுத்து இயங்கும்.

3. "இந்திய விரிவாதிக்க எதிர்ப்பு" கொள்கையில் தென்னாசிய நாடுகளில் உள்ள மக்களுடன் புரட்சிகர மற்றும் முற்போக்கு சனநாயக இயக்கங்களுடன் கூட்டிணைந்து செயற்பட முழு முயற்சி மேற்கொள்வது. இயன்ற அளவிற்குக் குறைந்த பட்சமாக அந்தந்த நாடுகளில் ஒரு பொது பிரச்சாரத்தை துவக்குவது. அந்நாட்டு மக்களுடன் நெருங்கிய உறவை வைத்துக் கொள்வது.

4. சிறுபான்மை மக்களின் குறிப்பாக முஸ்லீம்-மலையக மக்களின் அடிப்படையான சுதந்திர உணர்வுக் கோரிக்கைகளை, சுயாட்சி அமைவுகளை அங்கீகரித்துப்போராடுவது. இதில் தமிழீழத்தில் வாழும் சிங்கள மக்களுக்கும் சிறிலங்காவில் வாழும் தமிழர்களுக்கும் வாழ்நிலைக்கு உத்தரவாதமளிப்பது. அத்தகைய சமூகநிலையை எதிர்ப்பவர்களை எதிர்த்துப் போராடுவதும் ஆகும்.

5. சாதி-மத-பிரதேச ஆதிக்க ஒடுக்குமுறைகளுக்கும் வேறுபாடுகளுக்கும் எதிராகப் போராடுவது. இவ்வேறுபாடுகளை, ஆதிக்க உணர்வுகளைத் தகர்த்து உழைக்கும் மக்களின் ஐக்கியத்தை, ஒற்றுமையை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், அதற்கான மனித சிந்தனையை வளர்ப்பதும் உழைப்பதும்.

6. இச்சமூக அமைப்பில் நிலவுகின்ற தேசிய இன, வர்க்க, சாதிய அடக்குமுறைகளுக்கு முகங்கொடுத்த வண்ணம் மக்களுள் சரிபாதி எண்ணிக்கை கொண்ட பெண்கள் மேலதிகமாக ஆணாதிக்க அடக்குமுறைகளுக்கும் என இரட்டைத்தளைகளால் நசுக்கப்படுகின்றனர், எனவே இவ்விரண்டு வகை ஆதிக்கங்களுக்கு எதிராக மனிதசமுத்துவத்துக்காக முன்னின்று உழைப்பதும் போராடுவது..

7. இலங்கை மக்களின் போராட்டமுனைகள் ஒவ்வொன்றிலும் அரசு எதிர்ப்பு, விரிவாதிக்க எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, என்ற போராட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டு முக்கிய பாத்திரம் வகித்தும் செயற்படும் இயக்கங்கள் மறுபக்கத்தில்...

www.padippakam.com



..சனநாயக மறுப்பு, மக்கள்விரோத செயற்களிலும் புரட்சிகர தேசபக்த சக்திகளை தடை செய்வது, அழிப்பது போன்ற அராஜக நடவடிக்கைகளிலும் அவை ஈடுபடுகின்றன. இவற்றின் உள்நாட்டு சர்வாதிகார எதிர் புரட்சிகர அழிவுப் பாதைகளை - செய்கைகளை மக்களிடம் அம்பலப்படுத்து வதும் அந்தந்த முனைகளில் தனித்தும் கூட்டுசேர்ந்தும் அவற்றிற்கு எதிராக வெகுசனப் போராட்டத்தை நடத்துவது தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஆகும்.

— இரண்டாவது பிளீனக்கமிட்டி
புரட்டாளி முன்னணியினர் கழகம். PROVO

இலங்கைமக்களின் சுதந்திரமான சமத்துவ சகவாழ்விற்கும் தமிழீழ தேசிய சுதந்திரத்திற்கும் ஆன போரில் முன்னணி வழிகாட்டிகள் என இருக்கின்ற ஒவ்வொரு ஊழியரும் எந்த மக்களின் விடுதலைக் காக வாழ்ந்தும் போராடவும் முன்வருகிறார்களோ அந்த மக்களின் அடிப்படையான பிரச்சனைகளை அவர்களது அரசியல் பொருளி யல் சமூகப்பண்பாட்டு இராணுவத்துறைகளான சிக்கல்களை உணர்வுப்பூர்வ நிலையுடன் கற்றுக்கொள்வது, கண்டுகொள்வ தில் தாகம் கொண்டிருக்க வேண்டும். குறைந்தது அம்மக்களின் கடந்த அரை நூற்றாண்டு வரலாறுபற்றி தெளிவான பார்வைபெற வேண்டும். மக்கள் மத்தியில் வாழ்ந்து எல்லா வகையிலும் அவர்களுக்கு முன் உதாரணமாக திகழ்ந்து தியாகத்துடன் இணைந்த வாழ்நிலையை மேற்கொள்ள வேண்டும். இலட்சிய பயணத்தில் மக்களின் முன்னோக்கிய சிந்தனைகளினை கண்டு விதைக்க வேண்டும். வாழ்வில் எல்லாத்துறைகளிலும் யதார்த்தத்துடன் கூடிய அறிவுபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். போராட்டப்போக்கின் அன்றாட நிகழ்ச்சிகளின் மூலம் மக்களின் சிறப்பு அங்கீகரிப்பை பெற வேண்டும். தமது முன்னோடி பாத்திரத்தை நிலைநிறுத்த ஒவ்வொரு மக்கள் ஊழியனும் தன்னிடமுள்ள பலயீனங்களுக்கும் தவறான அணுகுமுறைகளுக்கும் எதிராக இடைவிடாது போராடிக்கொண்டிருக்க வேண்டும். இதன் மூலம் முன்னணி ஊழியர்கள் தங்களையும் தங்கள் அமைப்பையும் மக்கள் மத்தியில் நிலைபெற செய்ய முடியும். மக்களுடன்நாம் ஒன்றிக்க முடியும். மக்கள் விடுதலையை வென்றெடுக்க முடியும்.

— பு.வி.மு.க. வின் இரண்டாவது
பிளீனத்தில் வாசிக்கப்பட்ட
முன்னோடிகளுக்கான அறிவுறுத்தலில்
இருந்து.

www.padippakam.com

# மீண்டும் மாவீரர்கள்..



சிறகடித்துப் பறந்த
சேவை செய்த எம்
சிட்டுக்குருவிகளைப்
பாவிகளே..
சுட்டுப் பொசுக்கி விட்டீர்
பணியாதக் காரணத்தால்
கொடுங் கோலர்களே
குண்டுகளால் தாக்குண்டு
குற்றுயிராய்க்
குலையுயிராய்
துடி துடித்த அப்பாவிமக்களை
எண்ணெய் ஊற்றி
எரிக்கவா ஆணையிட்டீர்..
ஏ.. இரக்கமில்லா
அதிகாரவர்க்கமே..
பச்சை இளங்கொழுந்துகள் மேல்
பாழ் நெருப்பை இடச் சொன்னீர்
பணிந்தாரா எம் தோழர்கள்..?
மமதையாளர்களே..
உங்கள் தோட்டாக்கள் எம்
தோழர்களின் நெஞ்சைத் துளைத்திருக்கலாம்
ஆனால்..
தலைசாய்க்கவில்லை அவர்கள்
உங்கள் தோட்டாக்கள்
எம் தோழர்களின்
மண்டையைப் பிளந்திருக்கலாம்
மண்டியிட வில்லை அவர்கள்.
உங்கள் தோட்டாக்கள்
எம் தோழர்களின்
உயிரை மாய்த்திருக்கலாம்
ஆனால்..
கொள்கை மாறவில்லை அவர்கள்
அடக்குமுறையாளர்களே..
தோட்டாக்களால் கூட
வெல்ல முடியவில்லை உங்களால்
நீங்கள்
மனித உடம்பை வீழ்த்திருக்கலாம்
ஆனால்..
புகழுடம்பை அல்ல.
ஈரமில்லா நெஞ்சங்களே..
அந்த வீர நெஞ்சங்களின்
துணிவின் முன்னால்
நீங்கள்
தோற்றுத்தான் போனீர்கள்.

www.padippakam.com



..2

உங்கள் துப்பாக்கிகளுக்கு
உயிர் மட்டும் இருந்தால்..
கோழைகளே
அவை உங்களைக் கண்டு
எள்ளி நகையாடும்.

எத்தர்களே..
உங்கள் அகராதியில்
"தொண்டு" என்பதற்கு
"மரணம்"தான் பொருளா..
மரணம் உங்களுக்கு
மலிவாக இருக்கலாம்
அதிகார வெறியர்களே..
உங்களுக்கு எச்சரிக்கை.

தோழர்களின் மரணங்கள்
புரட்சியின் வித்துக்கள்
அதோ அந்த வீரர்களான
எம் தோழர்கள்
மீண்டும் மக்களிடம்
மலர்வார்கள்.
அலை அலையாய் வருவார்கள்
நிலைகுலையாது
மலை போல நிற்பார்கள்
அன்று..

உங்கள் துப்பாக்கிகளும்
களைத்து விடும்
முடிவில் எரிமலையாய்
அவர்கள் சீறும் போது..
பூமிப்பரப்பில்
உங்கள் பெயரது
பொசுங்கிச்சாம்பலாகும்..

புது வரலாறு தொடங்கும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழப் போராட்டத்தின்

## — சமகால நிலவரம் —

இலங்கை மக்களின் வரலாற்றில் 1977க்குப் பின் இலங்கை ஆளும் வர்க்கத்துக்கும் பௌத்த சிங்கள இனவாத அரசுக்கும் அதனது அரசியந்திரங்களுக்கும் எதிரான மக்களது எதிர்ப்பு போராட்டத்தில் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதந்தாங்கிய தேசிய சுதந்திர போராட்டம் இன்று வரை முன்னணியான போராட்ட முனையாக இருந்து வருகிறது. இலங்கை இனவாத அரசுக்கும் அதன் ஆளும் வர்க்கத்துடன் பின்னிப் பிணைந்து நிற்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான இலங்கை மக்களின் மற்றைய இரண்டு போராட்ட முனைகளையும் [சிங்கள மக்களது போராட்ட முனை, மலையக மக்களது போராட்ட முனை] போராட்டங்களையும் இலங்கை அரசு தன் கொடிய நவீன வகை கொலை, அழிப்புகள், அடக்குமுறைகள், இனவாத திசைதிருப்பங்கள் மூலம் நசுக்கி கட்டுக்குள் வைத்திருக்கிறது. வளர்ந்து விட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியாலும் அதன் விளைவான அரசியல் குழப்பங்களாலும் அம்முனை மக்களின் போராட்ட உணர்வுகளும் விடுதலை வேட்கையும் தினமும் புகைந்து கொண்டேயிருக்கிறது. இந்நிலையில் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக சிங்கள இனவாத அரசையும் அதன் இன அழிப்பு கொள்கைக்கு துணைநிற்கும் சர்வதேச பிற்போக்கு அரசுகளையும் தொடர்ந்து எதிர்த்து போராடிய வண்ணமும், மற்றைய முனை மக்களின் போராட்ட சக்திகளுக்கு ஒருவகை தென்பை கொடுத்தும் நிற்கும் தமிழீழ மக்களது தேசிய சுதந்திரத்துக்கான ஆயுதம் போராட்டத்தை ஒடுக்கி ஒரு கட்டுக்குள் கொண்டுவர இலங்கை அரசும் அதன் முப்படைகளும் மூர்க்கத்தனமான பலத்தை பிரயோகித்தும் இனவெறி சதி தந்திர வழிகள் அனைத்தையும் தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இலங்கை அரசின் முப்படைகளும் LTTE மீதான தாக்குதல் என்ற பேரில் வடக்கு கிழக்குப் பகுதி தமிழ் மக்கள் அனைவர் மீதும் இன அழிப்பை, இன ஒடுக்குமுறையை மேற்கொண்டுள்ளது. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய தமிழீழ பிரதேசங்களில் கடந்த ஓராண்டுகால இராணுவ நடவடிக்கை மூலம் தனது ஆதிக்கத்தை பலப்படுத்தியுள்ளது. இன்று LTTE ஐ அழிக்கும் கடைசிக்கட்ட நடவடிக்கை எனகூறி யாழ் தீபகற்பகத்தின் மீது உக்கிரமான இராணுவ தாக்குதலை தொடங்கியுள்ளது. "வலம்புரி" கூட்டு இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ் கோட்டையையும் தீவுப் பகுதிகளான அனலைதீவு, காரதீவு, நைனாதீவு, ஊர்காவற்துறையையும் தனது கட்டுப்பாட்டுள் கொண்டு வந்துள்ளது. இது முப்படைகளுக்கும் பெரும் நம்பிக்கை கொடுத்து யாழ்ப்பாணத்தையும் மீட்க தங்களது வலிந்த தாக்குதலில் இறங்கியுள்ளது. LTTEயின் கடற்புலிகளை கரை ஒதுக்கி விட்டதாகவும் LTTEயினர் யாழ் பகுதியிலிருந்து தப்ப முடியாதபடியும் மற்றைய பகுதிகளிலிருந்து யாழ் பகுதிக்கு வர முடியாதவாறும், கடற்பகுதிகளை கைப்பற்றிவிட்டதாக கடற்படை தளபதி 'கிளான்சி பெர்னாண்டோ' தெரிவித்துள்ளார். அன்றே ஊர்காவற்துறையில் தப்பியிருந்த புலிகள் பெரிய கண்ணி வெடி தாக்குதலை நடத்தினர். இந்நிலையில் பலாலி, ஆனையிறவு காரை நகர், இராணுவ முகாம்களிலிருந்து யாழ் மீதான தாக்குதலை வடக்கு பிராந்திய தளபதி கொப்பேகடுவா தலைமையில் துவக்கப் பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



விமானப்படையும் கடற்படையும் இராணுவத்திற்கு பக்கபலமாக செயற்படுகிறது. விமானப்படை நச்சுக்குண்டுகளையும் எரிவாயுக்களையும் சுமந்தபடியே மக்களுக்கு பிரசுரங்கள் மூலம் யுத்தமுன்அறிவித்தலை தெரிவிக்கிறது. இந்து கோயில்கள், கிறிஸ்தவ தேவாலயங்களிலும் மக்களை தஞ்சமடையும்படி எச்சரிக்கை விடுகிறது. எச்சரித்து சிலமணிநேரங்களில் பிரசுர மழைக்கு பதில் யுத்தவிமானங்கள் குண்டுமழை பொழிகிறது. இலக்குகள் பார்க்கப்பட்டோ, தவறியோ வீசப்படும் குண்டுவீச்சுக்கள் கோயில்களையும், தேவாலயங்களையும் பதம் பார்க்கிறது. அடுத்த நிமிடம்...

நூற்றுக்கணக்கான அப்பாவிமக்கள் தஞ்சமடைந்த இடங்களில் பிணங்களாக கிடப்பர். எஞ்சியவர்கள் கதறுவர், சிதறியோடுவர், தரைப் பகுதியில் முன்னேறிவரும் இராணுவம் கண்மண் பாராது சிதறியோடும் அப்பாவிமக்கள் மீது இயந்திர துப்பாக்கிகளால் இலக்கு தொடுப்பர்.

நாங்கள் புலிகள் அல்ல. அப்பாவிகள் எங்களை ஏன் சுடுகிறீர்கள் என கேட்பர் அப்பாவி மக்கள்.

இராணுவ தளபதிகள்.. உங்களுக்கு யுத்தமுன் அறிவிப்பு பிரசுரம் விமானப்படை வீசியது ஏனென்று தெரியாதா.. அப்பாவி மக்கள்; கோவில் மீது குண்டுவீசியது உங்கள் விமானங்கள்தானே என்பர்!

அடுத்தநாள்.. புலிகள் தங்கியிருந்த கோயில்கள் மீது விமானப் படை குண்டுவீசியது. நூறு புலிகள் அழிக்கப்பட்டனர். வானொலியும், செய்தி பத்திரிகையும் தமது சேவைகளை மக்களுக்கு தெரியப்படுத்தும்.

தாக்குதலால் பாதிக்கப்பட்ட பகுதிமக்களுக்கே 'உண்மை' வெளிச்சம். மற்றயவர்களுக்கு..... (?)

இராணுவ செய்தி தொடர்பாளர் கேணல் லலித்முனசிங்க இதை "உலகிலேயே தாக்குதல் நடவடிக்கை தொடுமுன் யுத்தப்பகுதியில் வாழும் மக்களை பாதுகாப்பு ஆன இடங்களில் தஞ்சமடைய முன்னறிவிக்கின்றது. இராணுவம் இலங்கை இராணுவமாகத்தான் இருக்கும்" என்று கூறுகிறார். இலங்கையில் நடக்கும் யுத்தத்தின் உண்மை நிலவரங்களை தெரிந்துக்கொள்ளக்கூடியவர்களால்தான் இவரது பேச்சை புரிந்துக்கொள்ள முடியும்.

இலங்கை அரசுக்கும் போராளிகளுக்கும் யுத்தம் தொடங்கிய காலத்திலிருந்து தமிழீழமக்களின் அன்றாட சகஜ வாழ்க்கை என்பது மாற்றத்தை கண்டது. போராளி இயக்கங்களின் முன்னேற்றங்களை கண்டு தாங்கள் இயல்புவாழ்வில் ஏற்பட்ட பசி, பட்டினி, உயிர்வதைகள் எல்லாம் ஒரு இடைகால தியாக சம்பவங்களென நம்பினர். இழந்துவிட்ட இன்பங்களையும் தாங்கமுடியாத வேதனைகளையும் துச்சமாக மதித்தனர் தமிழீழ மக்கள். 1985-களில் இயக்கங்கள் திசைமாறி முட்டிமோதி ஆளுக்கு ஆள் அழிப்பு வேலைகளில் ஈடுபட்டபோது "எங்கள் பிள்ளைகளை எங்கள் இயக்கங்களே அழித்து விடுகின்றது" அதுதான் "சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடுவந்து சேராது" என கூறி தாங்கள் வைத்திருந்த நம்பிக்கைகளில் அச்சம்கொள்ள நிர்பந்திக்கப்பட்டனர். இயக்கங்களின் திசைமாறிய செயல்களால் அசாதாரண நிலமைக்கு வந்திருந்த மக்கள் 1987-ல் அரசின் வடமாராச்சி மீதான தாக்குதல் காலத்தில் கடும் தொல்லைக்குள்ளாக்கப் பட்டு பட்டினி சாவுகள் யுத்தசாவை மீறி நின்ற போது...

படிப்பகம்

www.padippakam.com



.. இந்திய அரசின் விரிவாதிக்க தந்திர உணவு 'பொட்டலங்களும் இலங்கை-இந்திய ஒப்பந்தமும் விமோச்சனம் தந்திடும் என நம்பவைக்கப்பட்டனர். ஆனால் இந்திய படைகளின் வெறிச்செயல்களும் இரண்டாண்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் மக்களுக்கு நிஜவாழ்வில் இந்திய சமாதானத்தின் பொய்முகத்தைக் காட்டியது. IPKF-ன் வெளியேற்றத்தின் பின் LTTE-ம் இலங்கை அரசும் நடத்திய தேன்நிலவு காலங்கள் தமிழீழமக்களுக்கு இலங்கை அரசின் ஆட்சி சிறந்ததா.. இயக்கங்களின் ஆட்சி சிறந்ததா.. என்ற கேள்வியை எழுப்பியது.

1990-ஆனியில் மீண்டும் LTTE- இலங்கை அரசயுத்தம் துவங்கியது. தொண்ணூறுகள் முடியும் வரை LTTE இலங்கை அரசையும் படைகளையும் நிலைகுலைய செய்தது. ஆனால்.. இலங்கை அரசு 1987-க்கு பிறகு தமிழீழப் போராளிகளின் போக்கில் ஏற்பட்ட மாற்றம், இந்திய அரசின் அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றம், வல்லரசுகளின் செயற்பாட்டில் நடந்துவரும் மாற்றம் LTTE-க்கும் தமிழீழமக்களுக்கும் இடையே உள்ள முரண்பாடுகள்- இவற்றை கணித்து ஒருபுறம் அரசியல் ரீதியான அணுகுமுறையில் இனப்பிரச்சனையை பேசித்தீர்க்க வருமாறு LTTE-க்கு அழைப்பு விடுத்தது. மறுபுறம் LTTE க்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் செயல்தந்திர ரீதியான புதிய அணுகுமுறையை கையாண்டது. எல்லைபுறங்களில் இராணுவ நடவடிக்கை துவங்கி தாக்குதல்களில் முடிந்தமட்டும் புலிகளை அரசை எதிர்த்துப் போராடும் போராளிகளை அழிப்பது ஒவ்வொரு அடியாக தேடுதல் வேட்டையில் ஈடுபடுவது. தாக்குதல் நடத்தும் பகுதியில் பரவலாக மக்களை இம்சிக்காது புலிகளுக்கு எதிராக அவர்களிடம், உணர்வின் அடிப்படையில் அரசை நம்ப செய்வது. அதே வேளையில் போராளிகளுக்கு ஆதரவான மக்களை கடும் சித்திரவதைக்குட்படுத்தி சிறைப்பிடிப்பது. இதன்போது தாக்குதலில் தப்பும் புலிகளை அடுத்த தாக்குதல் பகுதிக்கு செல்ல அனுமதிப்பது. தாக்குதலும் தேடுதல் வேட்டையும் முடிந்த பிரதேசத்தில் இராணுவ சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது. மக்களுக்கு உணவு விநியோகத்தை குறைந்தபட்சம் சீர்படுத்துவது. அரசுமீதும் இராணுவத்தின் மீதும் நம்பிக்கை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் மக்களுடன் தந்திரமாக பழகக்கூடிய படைப்பிரிவுகளை செயலில் இறக்குவது இச்செயல் தந்திரத்தை உன்னிப்பான தலைமை கண்காணிப்புடன் நடவடிக்கையில் இறக்கியது இலங்கை அரசு.

இந்த ஆண்டின் முதல் ஐந்துமாத இராணுவ தாக்குதல் கிழக்குப்பகுதியினை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதேயாகும், இங்கு அரசு தனது தாக்குதலை துவங்க பல காரணங்கள் உண்டு. (அ) இதுவரைகால யுத்தத்தில் LTTE-ன் முழு கட்டுப்பாட்டு வராதப்பகுதியாக LTTE போராளிகளின் பரந்த நடமாட்டம் அற்ற பகுதியாக விளங்கி வருவது. (ஆ) தமிழர்களும், முஸ்லீம்களும் இணைந்து வாழும் பகுதியாக இருப்பது. இவர்களுக்கிடையில் மோதல்களை உருவாக்கி விடக்கூடிய தீயசக்திகளை அரசு தனது கையாட்களாக வைத்திருப்பது. (இ) தமிழீழத்தின் எல்லை பிரதேசங்களாக இருப்பதால் LTTE அரசு தாக்குதலில் தப்பி காடுகளில் மறைந்துக் கொள்வதை தடுக்க முடியும். (ஈ.) சிறிலங்காவின் பூகோளரீதியப்பகுதியுடன் இணைந்து நின்று தாக்குதல்களை இயக்குவதில் உள்ள சௌகரியம்-கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை உடனுக்குடன் நிறுவுவது.

படிப்பகம்

www.padippakam.com


— (உ) தமிழீழ மக்களது போராட்டத்தில் வளர்ந்த திசை மாற்றிற்கும் தமிழீழ இயக்கங்களின் ஆதரவு பிரதேசமாக இருப்பது மத்திய பகுதிகளைவிட இங்கு LTTE-னரை அரசு சார்பு இயக்கங்களின் துணை கொண்டு இராணுவ பயிற்சிப் பாசறைகளை, நெருங்கிய LTTE ஆதரவாளர்களை இனம் காண்பது. "தமிழர்களை கொண்டு தமிழர்களை அழிக்கும்" தந்திரத்தை அரசு பயன்படுத்துகிறது. இவற்றின் சாத்தியப்பாட்டை அறிந்து அரசு மேற்கொண்ட தாக்குதல்களில் படைகள் பெரும் அளவு இழப்பின்றி அப்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. அடுத்த கட்டமாக...

முல்லைத்தீவு., கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதியை தனது தாக்குதல் பிரதேசமாக அறிவித்தது. காலவரம்பற்ற ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி மக்களை நடமாட்டமின்றி முடங்கிட செய்தது. அடையாளம் காணப்பட்ட LTTE யின் இராணுவ பாசறைகள் மீது முப்படைகளை கொண்டு நேரடி தாக்குதல்களையும், முடங்க வைக்கப்பட்ட பகுதியில் தேடுதல் வேட்டையில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதியர் சிறுவர்களை கைது செய்து சிறைக்கு அனுப்பியது. கடந்த கால யுத்தத்தில் IPKF-க்கு எதிரான யுத்தத்தின் போதுதான் LTTE முல்லைத்தீவு, வவுனியா காடுகளில் தனது இராணுவ பாசறைகளை ஏற்படுத்தி இருந்தது. இதனால் இலங்கை இராணுவம் இப்பகுதிகளில் நடந்த சண்டைகளில் பெரும் அளவிலான இழப்புகளை சந்தித்து தனது தாக்குதல் நிலையை கைபற்ற கைபற்ற வேண்டியிருந்தது. இருந்தாலும் இப்பகுதிகளிலிருந்து LTTE யை முற்றாக விரட்டுவதிலும் அழிப்பதிலும் தோல்வியை சந்தித்தது. நகர்புற பகுதிகளை மட்டும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் திருப்திபட்டுக்கொண்டது. ஆண்டு நடுப்பகுதியில் இராஜீவ் காந்தியின் கொலைக்கு பின்பு சர்வதேச அளவில் குறிப்பாக இந்தியாவில் ஏற்பட்ட பாதிப்பும் LTTE-ன் யுத்த ஆற்றலை மறைமுகமாக பல மடங்கு கட்டுப்படுத்தியது. இலங்கை அரசு இதை சரியாகவே கணித்து கையாண்டது. விளைவு யாழ்பகுதிக்கும் கிழக்குக்கும் இடையிலான நிலதொடர்பு பகுதியான சங்குப்பிட்டி, ஆனையிறவு பூனகரி பகுதிகளை முற்றாக அரசு படைகள் கைபற்றிக்கொண்டது.

தற்போது நடக்கும் யாழ்பாணம் மீதான தாக்குதலில் வெற்றி தோல்வி இருபகுதியையும் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்தது. மத்திய பகுதிகளில் LTTE-யையும் மக்களையும் பிரித்தறிய, தன் கைவசப்படுத்த, எடுத்த தந்திர முயற்சிகள் அனைத்தையும் இராணுவம் யாழ் தாக்குதலில் பயன்படுத்த முனைகிறது. ஆகவேதான் பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவை இரண்டு மடங்கு வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. தந்திரமாக எவ்வளவு முயற்சித்தாலும் இத்தாக்குதலில் பெரும் மக்கள் அழிவை சந்திக்க நேரிடும். ஆனையிறவு வழியை திறந்துவிட்டு யாழ் மக்களை வெளியேற்றி பிரதேச ரீதியாக வேறுபகுதியில் தஞ்சமடைய கோருகிறது.. இராணுவத்தளபதி வனசிங்க "1983-க்கு பின்னர் LTTE இன்று யாழ்பாணத்தில் முடக்கப்பட்டது போல் ஒருகாலம் முடக்கப்பட்டதில்லை. எனவே LTTE யை துடைத்தொழிப்பதில், வழிக்கு கொண்டுவருவதில் இராணுவம் தவறக்கூடாது" என்பதே காரணம் என கூறுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கை அரசின் அரசியல் ரீதியான தந்திர அணுகுமுறையும், இராணுவ ரீதியிலான மூர்க்கத்தன தாக்குதலும் LTTE ஐ பெரும் குழப்பத்திற்குள்ளாக்கியுள்ளது. மேலே பார்த்தபடி இராணுவ நடவடிக்கையை முடுக்கி விட்டுள்ள இலங்கையரசு அரசியல் ரீதியில் LTTE ஐ மக்களிடமிருந்து தனிமைப்படுத்தக் கூடிய விதத்தில் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வடக்கு கிழக்குப் பகுதியில் தமிழர் பிரச்சனைக்கு தீர்வுகாண 43 எம்பிக்கள் அடங்கிய ஒரு பாராளுமன்றத் தேர்வுக் குழுவை அமைத்துள்ளது. தொண்டமான் மூலம் பேச்சு நடத்த எடுத்த முயற்சிகள் எல்லாம் இத்தேர்வுக் குழுவால் ஆராயப்படுகிறது. முதலில் பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அறிவித்த யோகியின் செய்தி மக்களுக்கு எட்டுமுன் யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவ தாக்குதலை நிறுத்தியும் பொருளாதாரத் தடைகளை நீக்கியும் கௌரவமான இலங்கை அரசு-புலிகள் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரென்று மாத்தையாவின் செய்தி வெளியிடப்பட்டது. LTTE தன்னிடம் கைதியாக உள்ள 48 போலீசாரை அவர்களது உறவினர்கள் பார்க்க செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுமதித்தும் உள்ளது. உண்மையில் LTTE யின் நிலை எப்படியாவது யாழ்ப்பாணத்தின் மீதான அரசின் இராணுவ இராணுவ தாக்குதலை நிறுத்திவைத்து தன்னிடமுள்ள சக்தியை காப்பாற்றி அடுத்த வழியை காணவேண்டும் என்பதுதான். இவ்விசயத்தில் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதில் இலங்கை அரசுக்கும் இராணுவத்திற்கும் இடையில் முரண்பாடு இருக்கிறது. இதன் பின்னணி புரிந்து கொள்ளக் கூடியது.

LTTEக்கும் அரசபடைகளுக்கும் இடையில் நடக்கும் யுத்தமானது மக்களுக்கு நாளாந்தம் தமது விடுதலையிலும் இமேலாணத்திலும் நம்பிக்கை கொடுத்து வளர்ப்பதாக இல்லை. இரண்டு தரப்பிலும் தினமும் நடக்கும் சிறு அளவிலான ஆள்பலியும் இடையிடையே நடக்கும் பெருமளவிலான ஆள்பலியும் யுத்தத்தில் ஒரு முன்னேற்றத்தை யாருக்கும் கொடுக்கவில்லை. போராட்டத்தில் ஒரு வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை. LTTE யின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களை அதனால் பேணிப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை. ஒரு சிறு பகுதியை கைவசப்படுத்தி, கட்டுப்பாட்டிலிருந்த இருந்த ஒரு பகுதியினை இழப்பது என்ற நிலையேயுள்ளது. கைவசப்படுத்திய பகுதியில் மக்களைத் தயார்படுத்தி எதிரியிடமிருந்து பிரதேசத்தை நிரந்தரமாக பாதுகாக்கும் நோக்கில் - எதிரியுடன் சமர் புரிய மக்களே கற்றுக் கொள்வதையோ, கற்றுக் கொடுப்பதையோ LTTE செய்வதில்லை, அவ விரும்புவது கூட இல்லை. மாறாக அத்தகைய செயல்பாடுகளுக்கு தடையாகவிருக்கிறது. யுத்தத்தின் முழுவதுமாக அலைந்து திரியும் கொரில்லா நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அலைந்து திரியும் இடங்கள் எல்லாவற்றிலும் கண்ணி வெடியை வெடிக்கச் செய்து திருப்திப்படுகிறது. கொரில்லா யுத்த முறைப்போக்கை வளர்த்து மக்களை நிரந்தர படைகளாகக் கட்டி மக்கள் யுத்தமாக மாற்றுவதில் திராணியற்று இருக்கிறது. இதற்கு LTTE யின் அரசியல் இராணுவ பாதையும் கொள்கையும் பிரதான தடையாக இருக்கிறது. யுத்த நடவடிக்கைகளின் தொடர் அனுபவத்தில் சில நல்ல திறமைகள் புதிய முறையின் தேவையை சிந்தித்தாலும் அவர்களிடம் உறைந்துள்ள சித்தி இராணுவ தத்துவம் செயற்பட அனுமதிப்பதில்லை. இதனால் கைவசம் உள்ள LTTE யின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் கூட அவர்களது தவறான சிவில் நிர்வாக ஒழுங்கு முறைகளும் போர் தயாரிப்பும் மக்களை மிகவும் வெறுப்படையச் செய்கிறது.

இவற்றை அரசபடைகள் தமக்குச் சாதகமான அரசியல் அம்சங்களாக எடுத்துக் கொள்கின்றன. தமது இராணுவ வெற்றியை உக்கிரமாக்கி LTTE யை தாக்கியழிக்க முனைகிறது. இலங்கை இனவாத அரசின் பிரதேசக் கைப்பற்றலை, ஆக்கிரமிப்பை இனப்பாரபட்சத்தை எதிர்க்கும் தமிழீழ மக்களின் குரலைப் போராட்டத்தை நசுக்கிவிடத் துடிக்கிறது. ஆனால் யுத்த நடவடிக்கைகளில் LTTE யின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதியை அரசபடை கைப்பற்றிக் கொள்ளவும் போராளிகளை அழிக்க எடுக்கிற முயற்சிகளில் தமிழீழ மக்கள் சொல்ல முடியாத துயரங்களுக்கு ஆளாகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஒரு தேடுதல் வேட்டையில் மூன்று LTTE போராளிகளை கண்டுபிடிக்க 300 அப்பாவிகளை இராணுவம் வதைத் தெடுக்கின்றது. இவ்வாறு 300 பேரில் 10 இளைஞர்களாவது LTTE ஐ நோக்கி உருவாவது தவிர்க்க முடியாமல் நடைபெறுகிறது. அரசபடைகளில் இந்த இராணுவ நடத்தை பலயீனத்தை LTTE தனக்கு ஆள் சேர்க்கும் யுக்தியாக பல இடங்களில் பயன்படுத்துகிறது. இந்த அனுபவங்களைக் கண்டு தொடுத்த எதிரி இராணுவ நடவடிக்கைக்கு முன்னும் நடவடிக்கையின் போதும் குறிப்பிட்ட பகுதி மக்கள் மீது கையாளும் வெறிச் செயல்களை அப் பகுதியைக் கைப்பற்றிய பின் மிகவும் இதமாக (பாதிரியார்களின் நற்பிரசங்கம் போல்) கையாளத் தொடங்கியுள்ளான். எதிரியின் இந்த தந்திரங்களை உடைக்க மக்களது வாழ்நிலைப் பிரச்சனைகளில் அவர்களது அடிப்படை ஜனநாயக கோரிக்கைகளுடன் அவர்களது இயல்பான உணர்வு வெளிப்படுத்தல்களுடன் LTTE ஆல் ஒன்றிக்க முடியவில்லை. LTTE யினர் இதை இவ்வளவு காலமும் அறியும் கற்றுக் கொண்டதாக தெரியவில்லை. அவர்களது தனி இயக்க சர்வாதிகார நடத்தைகளும், சாதி சிந்தனையும் இராணுவவாரிய கொள்கையும் அவர்களுக்குத் தடையாக இருக்கிறது. பதிலுக்கு "அரசபடைகளை ஓரிடத்தில் தாக்கி விட்டு (கண்ணி வெடி வைத்துவிட்டு) கொரில்லாக்கள் பின்வாங்க அப்பகுதியில் அரசு படைகள் வெறியுடன் அத்துமீறி அட்டூழியங்கள் புரியும். அவ்வழியாக வன்முறையை சந்தித்த மக்கள் போராடக் கிளம்புவர்" இதுவே மக்களை போராடத் தயாரிக்கும் வழி எதிரி மேல் வெறுப்பு கொள்ள வைக்கும் வழி என்ற குட்டி முதலாளிய இராணுவ தந்திரத்தை LTTE ஆரம்பகாலம் முதலே பின்பற்றி வருகிறது. இதன் பலன் மக்கள் உணர்வு பூர்வமாக எதிரியை எதிர்த்து போராடக் கூடிய மனநிலையை எதிர்த்து மனநிலையை சிதைத்து போராட்டத்தில் வெறுப்புற்று அந்நியப்பட்டு நிற்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது. இதைத்தான் மக்கள் மத்தளம் போல் நாங்கள் அரசாலும் LTTயாலும் பாதிக்கப்படுகிறோம் என்கிறார்கள்.

தமிழீழ மக்களின் போராட்ட முனையில் இருந்து போராடிக் கொண்டிருக்கும் சக்திகளில் LTTE தான் பிரபல்யமானதாகவும் அரசபடைகளை எதிர்த்து நிற்கும் இராணுவ சக்தியாகவும் வெளிப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளை தாண்டிய நிலையில் யுத்தமுனையில் ஓரி வீசிக் கொண்டிருக்கும் ஒரு இயக்கமாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது. LTTE யின் சக இயக்க அழிப்புக் கொள்கையும் கொடூரமான கொலை வெறி நடவடிக்கைகளும் மக்கள் மத்தியிலான ஜனநாயக விரோத போக்குகளும் அராஜக செயல்களும் தமிழீழ மக்களின் போராட்டத்திற்கு பெருந் தீங்கை விளைவித்து இருக்கிறது. நல்ல பல போராளிகளை போராட்ட களத்தை விட்டே துரத்தியடித்திருக்கின்றது. தெளிவற்ற பல சக்திகளை எதிரியின் கைகளுக்குத் தள்ளியிருக்கிறது. ஆனால் உறுதியான தெளிவான பாட்டாளி வர்க்க சக்திகளை போர்க்களத்தில் புடம் போட வைத்துள்ளது. இவையெல்லாம் LTTE என்றொரு இயக்கமாக வாழும்வரை நடந்து கொண்டேயிருக்கும். அனைத்திற்கும் அடிப்படையாக LTTE இனவாத அரசையும் படைகளையும் தனது வழியில் நின்று எதிர்த்துப் போராடும் வரையில் தமிழீழ மக்களின் போராட்டக் களத்தில் மின்னிக் கொண்டேயிருக்கும். மறுபக்கம் மக்களைச் சார்ந்து மக்களின் நேரடி பங்களிப்புடன் போராட்டத்தை இணைப்பதிலிருந்து விடுபட்டு சாகசகாரர்களின் போராட்டமாக நடத்திவருவதின் மூலமும், போராட்ட களத்தில் தனது இயக்கத்தை தவிர வேறு யாரும் போராடக் கூடாது என்ற தனி இயக்க சர்வாதிகார பாசிச செயல்கள் மூலமாகவும் LTTE தனது தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டி தானே தன்னை அழிப்பதையும் LTTE ஐ தவிர வேறு யாராலும் நிறுத்த முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



இந்நிலையில் L.TTE இனது சனநாயக மறுப்பு, மக்கள் விரோத சர்வாதிகார ஏக இயக்க அழிப்பு கொள்கை செயற்பாடுகளை அம்பலமாக்குபவர்களுக்கெதிராக, இலங்கை இனவாத அரசும் படைகளும் LTTE ஐ அழிப்பதாக கூறிக் கொண்டு தமிழீழ மக்கள் மீது நேரடியாக அல்லது மறைமுகமாக நடத்தும் மனித உரிமை மீறல்களை, கொள்ளையடிகளை, பாலியல் வன்முறைகளை, இனஅழிப்பை, பரந்த ஆக்கிரமிப்பை, நியாயப்படுத்த முடியாது. அவ்வாறு நியாயப்படுத்துபவர்கள் அரசசார்பு தமிழ்துரோகத் தலைமைகளை தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது.

தமிழீழ மக்கள் மீது சிங்கள இனவாத அரசும் படைகளும் வரலாற்றுரீதியாக மேற்கொண்டு வரும் இன அழிப்பு, இன ஒடுக்குமுறையின் கொடுந்தன்மையும், தமிழின ஒடுக்குமுறைக்கு எதிராக போராடக் கிளம்பி இன்றுவரை போராடிக் கொண்டு ஒரு புறம் சக இயக்கங்களை அழித்து தனி இயக்க சர்வாதிகார நடவடிக்கையில் ஈடுபடும் LTTE யின் ஏகத்தன்மையும் அதன் இருப்பையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். LTTE யின் தீய அம்சங்களை (அரசியல் நோக்கம், போர்முறைகளைச்சார்ந்து தேச பின்னணிகளை, அவர்களின் பின்புலத்தில் இருந்து பார்க்க வேண்டும்) நாம் எதிர்ப்பதும் அதனைத் அழிப்பு நடவடிக்கைக்கு தற்காப்பு செய்வதும், பதிலடி கொடுப்பதையும், இனவாத அரசபடைகளின் ஒட்டுமொத்த இனவெறி தாக்குதல்களுக்கு உட்படுத்திப் பார்க்கக்கூடாது. அது தமிழீழ மக்களின் பொது எதிரியான இனவாத அரசின் தந்திரங்களுக்கு நாமாகவே பலியாவதாக முடியும்.

"வடக்குகிழக்கில் தமிழீழ போராளிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவது மிகஅவசியமானது. இதற்கு 'கூட்டு இராணுவகுழு' அமைக்கப்படுகிறது. ஓய்வுபெறும் அனுபவம் உள்ள இராணுவதளபதி கமில்டன் வனசிங்க தலைமையில் இது செயற்படும்" என இராணுவ அமைச்சர் ரனில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதிலிருந்து நாம்புரிந்து கொள்ள வேண்டியது இலங்கை அரசிற்கும் இராணுவத்திற்கும் தமிழீழ பகுதியில் இன்றைய பிரதான இலக்கு LTTE யை தவிர அவர்களின் அடிப்படை இலக்கு தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராடும் எல்லா தமிழீழ போராளிகளும் தான். போராளிகளை அழிப்பதும் தமிழ் மக்கள் மீதான இனஒடுக்குமுறையை தீவிரப்படுத்துவதும்தான். இன்றைய இலங்கை இனவாத அரசிற்கும் அதனைக் கட்டிக்காக்கும் அரசு இயந்திரங்களும் சிங்கள பௌத்த இன, மதவாதத்தில் ஊறி வளர்ந்து இருக்கின்றது. தமிழின ஒடுக்குமுறையும் இன அழிப்பும் இதன் இருப்புக்கு பிரதான ஆதாரங்களாகும். ஆகவே இலங்கை சிங்கள இனவாத அரசும் அதன் அரசு இயந்திரங்களும் அடித்து நொருக்கப்பட்டு ஆளும் வர்க்கம் தூக்கி எறியப்படும் போதுதான் தமிழீழ மக்களது இன ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இனமத வர்க்க பேதமற்ற இலங்கை மக்களின் சுபீட்சமான சுதந்திர வாழ்வுக்கு உத்தரவாதம் கிடைக்கும்.

* இலங்கை ஆளும் வர்க்கத்தின் அரசியல் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்துவோம்!
* தமிழீழ மக்கள் மீதான முப்படைகளின் தாக்குதலை எதிர்த்துப் போராடுவோம்!
* தமிழீழ அராஜக தலைமைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வருவோம்!
* இனவாத அரசுக்கு எதிரான, மலையக சிங்கள மக்களது போராட்டத்துடன் ஒன்றிணைவோம்!

> "உன்னைப் பற்றி முழுமையாகவும் உன் எதிரியைப் பற்றி முழுமையாகவும் அறிந்து யுத்தகளத்திற்கு செல்வாயானால் நடக்கவிருக்கும் நூறு யுத்தங்களின் விளைவைப் பற்றிக் கவலைப்படாதே. நீ உன்னைப் பற்றி மட்டும் அறிவாய், எதிரியை பற்றி தெரியாத நிலையில் யுத்தகளத்திற்கு செல்வாயானால் நீ அடையும் ஒவ்வொரு வெற்றிக்கும் ஒரு தோல்வி நிச்சயம் உண்டு. நீ உன்னைப் பற்றி அறியாமலும் எதிரியைப் பற்றி அறியாமலும் யுத்த நடவடிக்கையில் ஈடுபடுவாயானால் நீ தொடுக்கும் நூறு யுத்தத்திலும் நிச்சயம் தோல்வியடைவாய்"
>
> — மாவோ —

படிப்பகம்

www.padippakam.com



## ராஜீவ் கொலைக்குப் பின் இந்தியாவில் தமிழீழ அகதிகள், போராளிகள், ஆதரவாளர்கள் முகம் கொள்ளும் புதிய நெருக்கடிகள்: ஒரு பார்வை. - - -

ராஜீவ் கொலையை தொடர்ந்து இந்தியாவில் உள்ள தமிழீழ அகதிகளுக்கும் போராளிகளுக்கும் வேகமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது அவர்களை கடுமையாகப் பாதிக்கிறது. இதே போல் வேகமாகவும் சிந்திக்க தூண்டுகிறது. இந்திய ஆக்கிரமிப்பு படையின் நேரடியான கொடூரம் நிறைந்த நடவடிக்கைகளை சந்திக்காத தமிழீழத்தவர் பலர் இப்போது இந்திய நடுவண், மற்றும் மாநில அரசு அவர்களின் காவல்படை - உளவுப்படையினரின் மனிதநேயமற்ற திடீர் நடவடிக்கைகள் மூலம் இந்தியரசு அரசியல்வாதிகள், அதிகாரவர்க்கம் பற்றி ஓர் அனுபவ அறிவை பெற்றுக்கொண்டு வருகின்றனர்.

இதே போல் விசேடமாக விடுதலைப்புலிகள் ஆதரவும் உதவியும் செய்து வந்தவர்கள் ராஜீவ் கொலைக்குப்பின் கைது செய்யப்பட்ட புலிகளின் வாக்கு மூலங்கள், சந்தேகங்கள் வழியாக மிகவும் கடுமையான அடக்கு முறைக்கும், சித்திரவதை, சிறை வாழ்வுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில் இச் சம்பவங்கள் அவற்றின் பின்னணிகள் பற்றிய ஒரு பார்வையை காண முடிகிறது இங்கே.

முதலில் எழுகின்ற சிந்தனையும் கேள்வியும் ராஜீவ் கொலைக்கு பின்பு தான் தமிழீழ அகதிகள், போராளிகள், ஆதரவாளர்கள் மீது இந்தியரசு அடக்கு முறையை நெருக்குதலை கட்டவிழ்த்து விட்டதா? இல்லையென்பதே நமது பதில்.

1985 திம்பு பேச்சு வார்த்தைக்கு பின்பு மெதுவாக தொடங்கிய நெருக்குதல் இயக்கங்களின் தொலைத்தொடர்பு சாதனங்கள், ஆயுதங்கள் பறிப்பு என 1986இல் வளர்ந்து 1987ல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ள தயக்கம் காட்டியவர்கள் எதிர்த்தவர்கள் என பலவகை நேரடி மறைமுக அச்சுறுத்தல்கள் அடக்கு முறைகளை இந்திய நடுவண் அரசு மேற் கொண்டது. தமிழீழ பகுதிகளில் விடுதலைப் புலிகளை எதிர்த்து யுத்த களத்திலும் துரோக இயக்கங்கள் மூலமும் அவற்றுடன் சேர்ந்தும் நேரடியான ஆக்கிரமிப்பு அழித்தொழிப்புக்களை தமிழீழ மக்கள் மீது மேற் கொண்டது இந்தியரசு. இக்காலங்கள் ராஜீவ் தலைமையில் இந்திரா காங்கிரஸ் கட்சி நடுவண் அரசையும் அ.தி.மு.க மாநில அரசையும் ஆண்டு வந்தன. ஆக்கிரமிப்பு படைகளின் கொடுமைகளை எதிர்த்த மக்களது உணர்வுக்கு ராஜீவ் காந்தியும் இந்திரா காங்கிரசும் மறை இன்றி எதிரிகளாக தென்பட்டனர்.

தேசிய முன்னணியும் வி.பி.சிங்கும் நடுவண் அரசு பதவியை 1989இல் கைப்பற்றியவுடன் இந்திய ஆக்கிரமிப்பு படைகளின் மீதான இந்திய மக்களின் வளர்ந்து வந்த எதிர்ப்பை தணிக்கவும் தேர்தல் வாக்குறுதிக்காகவும் அரசியல் இலாபம்

படிப்பகம்

www.padippakam.com



ஸ்டண்டுக்காகவும் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை பின்வாங்கிக் கொண்டது. தமிழ் மாநில அரசும் தி.மு.க.வும் தமது பங்கிற்கு உலக தமிழர்களை ஏய்க்க சில அரசியல் ஸ்டண்டுகளில் ஈடுபட்டனர். இந்திய - இலங்கை ஒப்பந்தம் வரை இலங்கைத் தமிழர் பிரச்சனையை தமது தேர்தல் காய்களில் ஒன்றாக வைத்து விளையாடிய தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளும் தேசிய ? அரசியல் கட்சிகளும் ஒப்பந்தம் இந்திய ஆக்கிரமிப்பு படை நுழைவு, பின்வாங்கலைத் தொடர்ந்து ஒரு நுட்பமான உத்திக் காயாக தமிழீழ மக்களது போராட்டத்தை பயன் படுத்தினர். திமுகவும், கலைஞரும் அவரது கூட்டணிகளும் தமது அரசியலுக்காக ஒரு பாதையிலும் அ.திமுகவும் அதனது கூட்டணிகளும் தேர்தல் எதிர்ப்பு அரசியலுக்காக வேறுபாதையிலும் நடந்தனர் தமிழீழ இயக்கங்களின் தலைமைகளும் அவற்றின் பிரிவுகளும் இவர்களின் பாதைகளுக்கு மலர் தூவி வந்தன.

தமிழ்நாட்டில் அ.தி.மு.கவும் மத்தியில் காங்கிரசும் ஆண்ட போது தமிழீழ துரோக இயக்கத் தலைமைகள் அரசு வழியில் ஒரு தனி மதிப்பை பெற்று வந்தனர். பதிலுக்கு தி.மு.கவும் தேசிய முன்னணியும் முறையே மாநில மத்திய அரசு கட்டிலைக் கைப் பற்றியவுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அரசு வழியில் தனிமதிப்பு கொடுத்து வந்தன என்பது உண்மையே. சென்னையில் பத்மநாபவும் 14 போராளிகளும் புலிகள் கொலை செய்யப்பட்டதும் கொலை செய்தவர்கள் சிக்காத போது திமுக அரசின் மானப் பிரச்சினைக்காக கலைஞர் விட்ட இரகசிய கோரிக்கையில் 5 புலிகள் சரணடைந்ததும் பின்னர் ஜாமீனில் தப்பவிட்டதும் வரலாறு. இதே கலைஞரும் திமுகவும் புலிகளின் இயக்க அழிப்பு கொலை வெறியில் சிறிசபாரத்தினமும் நூற்றுக்கணக்கான போராளிகளும் தமிழீழத்தில் அழிக்கப்பட்ட போது விட்ட கண்ணீருக்கு என்ன அர்த்தம்? தேவைப்பட்டால் அவர்களின் அரசியல் இலாபத்திற்காக புலிகளின் கொலை வெறியையும் ஆதரிக்க கூடிய முதலைக் கண்ணீர் என்பதுதான்.

மத்தியில் கோஷ்டிகளின் கூட்டு அமைப்பான தேசிய முன்னணி அரசு, சந்திரசேகரின் கோஷ்டி அரசியலும் இந்திரா காங்கிரசின் பின் வழி சூதுகளாலும் கவிழ்க்கப்பட்டது. வி.பி. சிங் அரசு கவிழ்ந்த போது சந்திர சேகர் மத்தியரசில் உட்கார்ந்தார். காங்கிரசு ஆதரவுடன் பதவி பெற்றதற்கு பதிலாக தமிழ் நாட்டில் திமுக ஆட்சியை கலைத்து நன்றிக் கடன் செய்தார். தென்னிந்திய மாநிலங்களின் வரலாற்றில் அண்டை நாட்டு போராளி இயக்கத்தின் சட்டம் ஒழுங்கு நடவடிக்கையை காரணம் காட்டி முதன் முதலில் மாநில அரசு கலைக்கப்பட்டது இதுவே முதல் தடவை. "விடுதலைப் புலிகளால் சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் கெட்டுவிட்டது" என திமுக அரசு கலைக்கப்பட்டது. இந்திய ஆளுநர்களின் எடுபிடி வரலாற்றில் தமிழ்நாட்டு அரசு கலைப்பை எதிர்த்து பர்னாலா ராஜினாமா செய்தார். ஆனால் திமுகவும் கலைஞரும் தங்கள் பிழைப்பு அரசியலுக்காக புலிகள், போராளிகள் மீது தாங்கள் மேற்கொண்ட அடக்கு முறையை பட்டியலிட்டுக் காட்டினர். பலன் திமுகவின் தமிழீழ ஆதரவு நாடகம் சாயம் வெளுத்தது. மக்கள் மத்தியில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை இந்திய அரசியல் கட்சிகள் தமது சூதாட்ட அரசியலுக்கு இயக்கத் தலைமைகள் வழியில் பிரித்து தரம் கொண்டு விளையாடினர். -

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாட்டில் புதிய எடுபிடி ஆளுனர் பிஷ்மன் தலைமையில் தமிழீழ அகதிகள், போராளிகள் சட்டம் ஒழுங்கை மீறுவதாக, குழப்புவதாகக் கூறி முகாம்களில் கட்டாயப்படுத்தி அடைக்கப்பட்டனர். போராளிகள் அனைவரும் சிறப்பு முகாம்களில் தேடிப்பிடித்து இருக்க வைத்தது. புலிகள் தனி முகாம்களில் இருத்தப்பட்டனர். தமிழகத்தில் இருக்கின்ற எல்லா தமிழீழத்தவரும் பதிவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவற்றையும் தாண்டி புலிகளும், போராளிகளும் வெளியில் நடமாடிக் கொண்டிருந்தனர். அகதி முகாம்களில் உள்ள மக்கள் உணவுப் பற்றாக் குறையால் அரிசிக்கும் பருப்புக்கும் பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்குள்ளாகினர். சிறப்பு முகாம்களில் இருந்த போராளிகள் உணவு தங்குமிட வசதி, உறவினர்களுடன் சேர்ந்து இருத்தல் இவற்றிற்காக தமக்கு தெரிந்த வழிகளில் கிளர்ச்சி செய்தனர். இக் கிளர்ச்சிகளை தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்குத் தலைவர் தேவாரம் பொலிஸ் படையைக் கொண்டு அடக்கிக் கொண்டிருந்தார்.

எனவே ராஜீவ் கொலைக்கு முன்னரே தமிழீழ அகதிகள், போராளிகள் மேல் மத்திய மாநில அரசுகள் தமது நெருக்கடியை தூண்டி விட்டிருந்தன. தங்கள் அரசியல் ஆதாயங்களை பொறுத்து சில இயக்கங்கள் மீது விட்டுக் கொடுப்பும் சிலவற்றின் மீது நெருக்குதலும் என மாற்றி மாற்றி செய்து வந்தனர். இவர்களது எல்லா மெத்தனங்களையும் அடக்குமுறையையும் இவர்களுக்கு உடந்தையாக இருந்து வரும் இயக்க தலைமைகளின் துரோகத்தனங்களையும் தனி இயக்க சர்வாதிகாரப் போக்கையும் மீறி தமிழீழ மக்களின் போராட்டம் புது வடிவத்தை, புது பாதையை நோக்கி மக்கள் சக்தியுடன் செல்வதைக் கண்டு தமிழ்நாட்டு மக்களிடம் அகதிகள், போராளிகள் மீது வெறுப்புணர்வை வளர்க்க திட்டமிட்டு செயற்பட்டனர் என்பதை சிறிது கவனித்தாலே புரியும் எல்லாருக்கும்.

"ராஜீவ் கொலையும் அதில் புலிகளின் பங்கும் இந்தியரசுக்கும் கீழ்த்தரமான அரசியல்வாதிகளுக்கும் அதிகார வர்க்கத்திற்கும் தமிழீழ அகதிகள் போராளிகள் மீது உக்கிரமான அடக்கு முறை பொய் பிரச்சாரங்கள் மேற்கொள்ள சிறந்த ஒரு சம்பவமாகவுள்ளது. தமிழ் மக்களின் நண்பர்கள் என வேசம் போட்ட இவர்களுக்கு ராஜீவ் கொலை பயன்படுகிறது. இந்த எதிரிகளை இனியும் தமிழீழ மக்கள் நம்பமாட்டார்கள் என்பதே முழு உண்மை. இந்திய மாநில மத்தியரசுகளின் இவ் அடக்கு முறை பின்புலத்தையும் அதில் பாதிக்கப்பட்டு வரும் சிக்கல்களையும் புரிந்து கொள்வது நல்லது. இதற்கு முன்பாக ராஜீவ் கொலையில் புலிகளின் பங்கு என்ன? என்பதையும் சிறிது பார்த்தாக வேண்டும். ராஜீவ் கொலை அதன் அதன் பின்னணி பற்றி பெரும்பாலான சாக்கடைப் பத்திரிகைகள் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் வாந்தி எடுப்பதை அப்படியே கொட்டி பிரசுரிக்கின்றன. அவர்களின் பத்திரிகா தர்மம் அது. சில சிறிய பத்திரிகைகள் தான் ராஜீவ் கொலையில் மறைந்திருக்கும் சர்வதேச பின்னணி சதி அதற்கான உளவு நிறுவனங்களின் முக்கிய பங்குகள் (சிவராசன், சுபா அல்ல) அவர்களுக்கிடையிலான கடிதப் பரிமாற்றங்கள் சங்கேத குறிப்புக்கள் என்பவைபற்றி வெளியிடுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



இப்பத்திரிகைகளின் வளர்ச்சியும் பரந்த தளமின்மையும் மக்கள் மத்தியில் ஒரு உண்மைச் செய்தியை தாக்குதல் திறனை கொடுக்கமுடியாதுள்ளது கவனிக்கத் தக்கது.

ராஜீவ் கொலையின் முழுப் பின்னணித் தகவல்களையும் தொகுத்தால் அதில் அமெரிக்க வல்லரசின் பங்கும் அதன் சர்வதேச சதி உளவு நிறுவனமான CIA பாத்திரம் வகித்துள்ளது புரியும். அடுத்து இந்தியாவிலுள்ள அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், அதிகாரிகள், சாமியார்கள், மத்தியில் இருக்கும் அமெரிக்க கைக் கூலிகள் தரகர்கள், பலரும் தெரியவரும். இந்த உலக சதிக் கொலைகாரர்களால் கொலை நடத்த சிறந்த அணியாக இத்தலைப் புலிகளும் களமாக தென் இந்தியாவும் இறுதியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

அப்படியெனில் புலிகள் வெறும் அப்பாவிகளா? நிச்சயமாக இல்லை. தமிழீழத்தின் மீதான இந்திய ஆக்கிரமிப்புத் தலைமை தாங்கிய ராஜீவ் காந்தியை, புலிகளின் தலைமைக்கு பெரும் நிர்ப்பந்தம் கொடுத்த ராஜீவ் காந்தி என்பவரை கொல்ல வேண்டுமென்ற ஆவல் இருந்து வந்துள்ளது. புலிகளுக்கு இதையும் அரசியல் தீர்க்க தரிசனமற்ற நடவடிக்கைகளின் எதிர் விளைவுகளை சிந்திக்காத மனிதர்களின் சுத்த இராணுவ கண்ணோட்டத்தையும் கொலை வெறி வேசத்தையும் குறிவைத்து தாக்குதல் உத்தியையும் நன்கு தெரிந்து இருந்தவர்கள் புலிகளுடன் தொடர்புள்ள CIA உளவு சதி நிறுவனக் கைக் கூலிகள் [காங்கிரஸ் கட்சியின் உயர் பொறுப்பு வாய்ந்த அரசியல்வாதிகள், அரசின் உயர் அதிகாரிகள் மத்தியிலும் உள்ளனர்] இஸ்ரேலிய மொசாத்தின் சில தலைவர்கள் உட்பட புலிகளுடன் பேசி செய்து கொண்ட ஒரு நடவடிக்கை தான் 'ராஜீவ் கொலை' நிகழ்ச்சியாகும்.

ஆயுதப் போராட்ட காலத்திலுள்ள ஒரு இயக்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் பெரும் அரசியல் இராணுவ தாக்கங்களை உண்டுபண்ணும் என்பதனை அறியாத அல்லது கணக்கில் கொள்ளாத புலிகளின் தலைமை இந்த நடவடிக்கையை இந்த நேரத்தில் செய்ய ஒத்துக் கொண்டதின் மூலம், ஏற்பட்டதின் மூலம் அடைந்த பலன் சில கோடி ரூபாய்களும் பெறுமதியான சில ஆயுதங்களும் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தமிழீழப் போராட்டத்தின் மீதும் புலிகள் இயக்கத்தின் மீதும் இன்று அள்ளி வாரி இறைப்பும் சேறும் சகதியும் புலிகளுக்கு பரவலாக ஏற்பட்டுள்ள நெருக்கடியும் புலிகள் இயக்கத்தின் சில தலைவர்களை தலைமறைய வைத்துள்ளது என்னவோ உண்மைதான். கண்ணுக்குத் தெரியும் ஆயுதந் தாங்கியவர்களையும் தங்களது மண்டைக்கு ஒத்து வராதவர்களையும் மட்டுமே எதிரியாகப் பார்க்க தெரிந்த – பார்த்து வந்த புலிகள் ஆயுதம் இல்லாத தீய நோக்கத்திற்கு பயன்படுத்த உதவிகள் புரியும் எதிரிகள் இருப்பது பற்றியும் அவர்களுக்குள்ளாகவே இருப்பது பற்றியும் புலிகள் ராஜீவ் கொலைக்கு பின்பாவது புரிந்து கொண்டால் நல்லது. தமிழீழ மக்களின் நியாயமான போராட்டத் தேவையின் தார்மீக பலத்தை உடைத்து உண்மையான போராளிகளை அழித்து விட்டு சொந்த மக்களையும் உலக மக்களையும் நம்பாது அரசுகளையும் உலக நிறுவனங்களையும் நம்பும் புலிகளின்

படிப்பகம்

www.padippakam.com



தலைமைக்கு இது ஒரு நல்ல பாடம்தான் அவர்களின் வரலாற்றில்.

இந்த 'ராஜீவ் கொலையில்' ஒரே கல்லில் இரண்டு கனிகளை பறித்த லாபம் கண்டது அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களும் சக உளவு நிறுவனங்களும் தமிழீழ மக்களின் போராட்டத்தின் எதிரிகளும் தான். முதலாளி வர்க்க செல்வாக்கு அதிகரிப்புப் போட்டியில் பிராந்திய ஆதிக்க தலைவர்களை அழிக்கும் சண்டையில் ராஜீவ் என்பவரை அழித்ததுடன் தமிழீழ மக்களின் போராட்டத்திற்கும் போராட்ட இயக்கங்களின் நற்பெயருக்கும் பெருங் களங்கத்தை சர்வதேச அளவில் ஏற்படுத்தியும் இருக்கிறார்கள் அந்த எதிரிகள். இங்கே புலிகள் கண்ட பயன் புலிகளின் தலைமைக்கு மட்டுமே வெளிச்சம்.

புலிகளின் போராட்ட வரலாறு என்பதன் ஒரு பகுதியாக எதுவிதமாக இடம், பொருள், ஏவல் பார்க்காது திட்டமிடாத தாக்குதல் மூலம் அழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர். பின்னர் பொதுசன அபிப்பிராயம் திசை மாறக்கூடிய வகையில் செய்திகள் வருவதையும் தமக்கு பாதகமாக மாறுவதையும் கண்டு, திடீரென முக்கியமான இராணுவ நடவடிக்கையில் இலங்கை அரசுக்கு எதிராக ஈடுபடுவர். முக்கிய யுத்தத்தில் புலிகள் ஈடுபட்டுள்ளார்கள் என செய்தி தொடர்பு சாதனங்கள் அலறும். இதன் வாயிலாக பொது சனங்களின், ஆதரவாளர்களின் உள்ள உணர்வை திசைதிருப்பி செய்திகள் மூலம் திசைமாற்றி கொள்ளை கொள்வது புலிகளின் இயல்பு. ஆரம்ப காலங்களில் புலிகளின் இந்த தந்திரம் பல சமயங்களில் கைகொடுத்துள்ளது. கடைசியாக இந்த தந்திரம் பத்மநாபா கொலைக்குப் பின்பு பயன்படுத்தப்பட்டு வெற்றி கண்டது. "அவர்கள் தான் களத்தில் நிற்பவர்கள், [மற்றவர்களை நிற்கவிடாது அழிப்பது தெரியாதா?] ஆயிரம் பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள், மற்றவர்களுக்கென்ன வியாக்கியானம் செய்யட்டும். களத்தில் நிற்பவர்களைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" எனக் கூறி போராட்டத்தின் பொதுத் திசைவழியை பின்தள்ளக் கூடிய புலிகளின் எந்த நடவடிக்கைகளும் பூசிமெழுகப்படும். குறிப்பாக இந்தியாவிலும் சில மேலை நாடுகளிலும் இந்த வேலை செய்வதற்கு ஒரு கூட்டமே இருக்கிறது. சென்னையில் பத்மநாபாவையும் 14 போராளிகளையும் கொலை செய்து விட்டு 'புகழ்' வாய்ந்த யாழ் இராணுவ கோட்டை மீது தாக்குதலைத் தொடுத்தனர் புலிகள். கோட்டையைக் கைப்பற்றப் பட்டு விட்டதாகவும் தமிழீழ மக்களின் நீண்ட கால அடக்கு முறைச் சின்னம் தகர்க்கப்படுவதாகவும் கூறினர். நூற்றுக்கணக்கான அப்பாவி புலிகளை ஒரு மாதத்திற்கு மேலான யுத்தத்தில் பலி கொடுத்தனர். அக்கம் பக்கத்தில் இருந்த மக்களை அகதிகளாக்கிய புலிகளின் தலைமை கடைசியில் கண்ட மிச்சம் என்ன? என்பதை அக்கறையாக பேசும் ஒவ்வொருவரையும் சிந்திக்க வைத்துள்ளது.

ராஜீவ் கொலைக்குப் பின் செய்தி தொடர்பு சாதனங்களின் அரை வேக்காட்டுச் செய்திகளால் பொது சன அபிப்பிராயம் புலிகளுக்கு பாதகமாக மாறத் தொடங்கியது. ராஜீவ் காந்தியின் பாசிச அரசியல் பின்னணியைத் தெரியாத தமிழீழ மக்கள் ஏன் கொலை செய்ய வேண்டும் என்றும் கொஞ்சம் அரசியல் தெரிந்தவர்கள் ராஜீவ்வை ஏன் புலிகள் இந்த நேரத்தில், இங்கு கொலை செய்ய வேண்டும் என

படிப்பகம்

www.padippakam.com



காதோடு காதாகப் பேசினர். விஷயம் அறிந்த புலித் தலைமை ஆனையிறவு இராணுவ முகாமை தாக்கித் தொடங்கியது. வடக்கு கிழக்கை இணைக்கும் இச் சிறு நிலப்பகுதியை கைப்பற்றுவது தமிழீழ தாகத்திற்கு அவசியமென அறிக்கைகள் வந்தன. இம்முறை புலிகளின் திசைமாற்றும் தந்திரம் அவர்களுக்கு பெரும் சேதத்தை விளைவித்ததுடன் தோல்வியையும் கொடுத்தது. ஆனையிறவு யுத்தத்திற்கு மீண்டும் நூற்றுக்கணக்கான அப்பாவி புலிகள் பலிகொடுக்கப்பட்டது தான் மிச்சம்.

இதுவரை காலமும் சிங்கள இயக்கங்களையும் அதன் தலைவர்கள், அப்பாவி போராளிகளை தமிழீழத்தின் சில முக்கிய பிரமுகர்கள் எல்லைப்புற அப்பாவி சிங்கள, முஸ்லிம் மக்களை அழிக்கும் போது பிரதான தினசரி செய்தியின் முக்கியத்துவத்தை, தொடர்போக்கை திருத்தி தம்மேல் வரக்கூடிய மக்களின் அதிருப்தியை தற்காலிகமாக வெற்றி கொள்ள பயன்படுத்திய 'திசைதிருப்பும் இராணுவ நடவடிக்கைகள்' ராஜீவ் கொலையைத் தொடர்ந்து "திடீர் தாக்குதலும் சுற்றி வளைப்பும் மான இராணுவ நடவடிக்கை" அவர்களது திசைமாற்றும் யுக்திக்கு பலன் தரவில்லை. காரணம் ஒரு நாட்டின் தலைவராக ராஜீவ் இருந்தும் சர்வதேச அளவில் பிரசித்தமான நபராக இருந்தும் தேர்தலில் காங்கிரஸ் வென்று ஆட்சியையும் அ.தி.மு.க. தமிழ்நாட்டு ஆட்சியை கைப்பற்றியதும் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆயுதத்தில் இருந்து காயம்பட்டவர்களுக்கான மருத்துவ வசதியில் இருந்து சிறந்த பின்தள உதவியை மாநில அரசு உத்தியோக பூர்வமாகவும் இரகசியமாகவும் தடைப்படுத்தியது. மறைமுகமாக புலிகளுக்கு அத்தகைய உதவி செய்தவர்களையும் அவ்வளைகளிலிருந்த புலிகளையும் கைவைத்து தேடித்தேடி கைது செய்து கொண்டது. மொத்தத்தில் எல்லா முதலாளித்துவ வியாபார பத்திரிகைகளும் புலிகளின் மீது வெறுப்பை மக்களுக்கு ஏற்படுத்தக் கூடிய செய்திகள் படங்களுக்கு முன்னுரிமை கொடுத்து புலிகளின் இராணுவ நடவடிக்கை செய்திகளை பின்னுக்குத் தள்ளி விட்டன. இவற்றின் மூலம் புலிகளின் திசைத் திருப்பும் உடைபட்டுப் போனது. இதை சரியாக கணித்த இலங்கை அரசு தனது முப்படைகளையும் நோக்கத்தனமாக தாக்குதலில் இறக்கியுள்ளது. தமிழீழப் போராளிகளின் இதுவரைகால இராணுவ தாக்குதலை எதிர்த்த அரசு படைகளின் எதிர்த் தாக்குதலில் ஆனையிறவு முகாமை மீட்டதற்கான தமது இராணுவ நடவடிக்கை புலிகளின் இராணுவ நடத்தைப் பாதையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போவது நிச்சயம் என இலங்கை முப்படைகளின் தளபதி வெளியிட்ட கருத்தை நினைவு கூர்வது நல்லது.

உண்மையில் தமிழீழ மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் மீது சிங்கள இனவெறியரசின் பிரதேசக் கைப்பற்றுதல்களும், இனவாத ஆக்கிரமிப்பு, இன அழிப்பு இவற்றை எதிர்த்து தமிழீழ மக்களின் தேச சுதந்திரத்தை நிலைநாட்ட போராடுவதாக சொல்லும் புலிகளின் தலைமை, கடந்த பத்தாண்டுகால யுத்தத்தில் ஒரு இராணுவ முகாமை முற்றாக தாக்கி அழித்து அதை நிரந்தரமாக அல்லது அதற்கடுத்த ஒரு பெரும் யுத்த நடவடிக்கை வரை தம் வசம் வைத்திருக்கின்றார்களா? இல்லை இது பலம், பலயீனம் சம்பந்தப்பட்ட பிரச்சனை மட்டுமல்ல அப்படியான யுத்த தந்திரப் பாதையோ யுத்த முறையோ, யுத்த நடவடிக்கையோ, புலிகளிடம் (வேறுயாரிடமும் கூட) இல்லை. அவர்கள் அவ்வாறு சிந்திப்பதும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

எதிரிகளை எதிர்த்து தீரமும் போராடுகிறார்கள். போராளிகளாகிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால் எதிரியை முற்றாக அழிப்பது பற்றியோ அழிக்கும் வழிமுறை குறித்தோ இதற்காக தமிழீழ மக்களை தயார்படுத்தி அணி திரட்டுவது தொடர்பாகவோ உலக மக்களின் ஆதரவை பெறுவது விடயத்திலோ அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் தலைமைகளிடம் சரியான கொள்கை இல்லை. அல்லது குறுக்குவழி சிறுமுதலாளிய கொள்கை உள்ளது. இதில் கூட சரியான அணுகுமுறை இல்லை. அனுபவத்தில் இருந்தாவது கற்றுக் கொள்ள புலிகள் இயக்கத்தலைமை உட்பட யாரும் தயாரில்லை. நூறு யுத்தங்களை தொடுத்த போதும், இரத்தம் ஆறாக பாய்ந்த போதும் தமிழீழ மக்களின் போராட்டம் உள்ளபடி அகநிலையில் வெற்றியை நோக்கி செல்லவில்லை. சர்வதேச அளவில் எமது போராட்டத்திற்கு இருந்த அனுதாப ஆதரவு திசை மாறிக் கொண்டிருக்கிறது. போராட்டமும் அப்பாவி போராளிகளும் தேக்க நிலையில் சிக்கித் தவிக்கின்றனர். இதுவே உண்மை.

புலிகளே உங்கள் பாதையை திரும்பிப் பாருங்கள். இழப்புக்கள், துன்பங்கள், துயரங்கள் இல்லாத விடுதலைப் பாதை ஒன்றும் இல்லை. ஆனால் நீங்கள் எத்தனை ஆயிரம் போராளிகளை இழந்தீர்கள் எத்தனை நூறு போராளிகளைக் கொன்றீர்கள். நமது மக்கள் எவ்வளவு துன்பங்களை சுமந்து கொண்டுள்ளனர். இவற்றிற்கு ஈடாக தமிழீழ மக்களும் அவர்களது போராட்டப் பயணமும் கண்ட பலன் என்ன? [உங்கள் தலைமையும் இயக்கமும் கண்ட பலன் என்ன?] சரி நீங்கள் அதிகாரப் போட்டியின் வெற்றிமுனை விளிம்பிலா நிற்கின்றீர்கள். இல்லை இன்றைய நிலை அதுவல்ல. புலிகள் இயக்கத்தின் அப்பாவி போராளிகளே! ஆதரவாளர்களே! உங்கள் தலைமை மக்களை விடுதலைக்கான போராட்டப் பாதையில் இருந்து வழி தவறிச் செல்வதைக் கண்டு கொள்ள இதுவே தருணம். நீங்கள் உங்களுக்காகவும் உங்கள் தாய் தந்தையர் சகோதரர்களின் நிகழ்காலத்திற்காகவும் கொஞ்சம் சிந்தியுங்கள். உங்கள் தியாகத்தையும் மரணத்தையும் பயனுள்ளதாக்குங்கள்.

ராஜீவ் கொலைக்குப் பின்னால் ஏற்பட்டுள்ள புதிய நெருக்கடிகளில் சிக்கியுள்ளவர்களின் நிலைமையை கவனித்தால் "இலங்கை இனவாத அரசிற்கும், படைகளுக்கும் எதிரான தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஒன்றுபட்டுள்ள இலங்கை அரசமைப்புள் தீர்க்கப்படவேண்டும் தனித் தமிழீழம் என்ற தேசிய விடுதலைக் கோரிக்கை ஏற்க முடியாதது." இதை இந்திய நடுவன் அரசும் இந்திய முதலாளி வர்க்க அரசியல் கட்சிகளும் ஆரம்பத்தில் இருந்தே கூறி வந்துள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நடுவன் அரசுடன் ஒட்டி வாழும் திராவிடக் கட்சிகள் எல்லாமும் தேசிய இனப் பிரச்சனைகளைப் பற்றி ஒருபக்க பார்வை கொண்டவர்களும் தமிழீழப் போராட்டத்தை மேடைகளில் ஆதரித்த போதும் உண்மையிலே தமிழீழக் கோரிக்கையை ஏற்கவில்லை. ஒருகால் ஆதரித்தால் அவர்கள் இந்தியாவில் மத்தியரசின் பாரபட்சமான மாநில நடத்தைகளையும், இந்தி, இந்து ஆதிக்க வெறிக்கெதிரான மாநில மக்களின் போராட்டங்களையும் சுதந்திர தமிழ்நாட்டுக் கோரிக்கையையும் இவர்களால் நிராகரிக்க முடியாமல் போகலாம்," என்ற உண்மை அங்கு தொக்கி நிற்கின்றது. இதனால் இந்திய நடுவன் அரசும் - மாநில அரசும், ஆளும் வர்க்க கட்சிகளும் தமிழீழப் போராளிகளை இந்திய தேசிய இனப் பிரச்சினையில்

படிப்பகம்

www.padippakam.com



இந்திய ஆதிக்கத்திற்கு எதிராக சுதந்திர தமிழ்நாட்டு உரிமைக்கு சிந்திக்கின்ற செயல்படுகின்ற மக்களுடன் தொடர்பு வைப்பதை திட்டமிட்டே தடுத்து வந்தனர். 'பயன்படுத்தல்' தத்துவத்தில் ஊறிய தமிழீழ சிறு முதலாளிய வர்க்க இயக்க தலைமைகளும் சுதந்திர தமிழ்நாட்டுக் கோரிக்கை கொண்ட மக்களுடன் உறவுகளை திட்டமிட்டே பயன்படுத்தி வந்தனர்.

இந்திய தேசிய இனப்பிரச்சினையின் வளர்ச்சியும் தமிழ்நாட்டில் மேலான நடுவண் அரசின் நெருக்கடிகளும் தமிழீழப் போராளிகளின் போராட்ட வேலைகளின் வெளிப்புறத் தாக்கமும் நாளாவட்டத்தில் சுதந்திர தமிழ் நாட்டுக் கோரிக்கையை அதற்கான மக்கள் சக்தியை தாண்டி விட்டது. தமிழீழப் போராளிகளின் ஒவ்வொரு செய்கைகளும் ஊடகங்களும் இதற்கான பின்புல எழுச்சியை வழங்கிக் கொண்டிருந்தது. தமிழீழ மக்களின் சுதந்திர தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் உண்மையில் உதவ வேண்டும் என்றால் "எங்களிடம் உள்ள இந்தி ஆதிக்க விலங்கு உடைக்கப்பட வேண்டும், எல்லாத் துறைகளிலும் சுதந்திர தமிழ் நாட்டுப் போராட்டம் வளரவேண்டும்." என்ற குரல் 1987 இந்திய- இலங்கை துரோக ஒப்பந்தத்திற்கு பின்னர் ஓங்கி உரக்க ஒலிக்கத் தொடங்கியது தமிழ் நாட்டில். இந்திய நடுவண் அரசும் சோரம் போன திராவிட மாநில அரசும் ஓங்கி அடக்கத் தொடங்கியது அந்த மக்கள் குரலை.

ராஜீவ் கொலைச் சம்பவத்தை இந்திரா காங்கிரஸ் அதிமுக கட்சிகள் தங்கள் தேர்தல் வெற்றிக்கு நன்றாகப் பயன்படுத்திக் கொண்டன. இன்றைய இந்த மாநில - மத்திய ஆட்சியாளர்கள் ராஜீவ் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் காட்டி தமிழீழ அகதிகள், போராளிகள், தமிழீழ ஆதரவாளர்கள், சுதந்திர தமிழ் நாட்டு எண்ணம் கொண்டவர்கள், என எல்லோரையும் ஒரு பொறி நெருக்கடிக்குள் தள்ளியுள்ளனர்! அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற, அதிகார வர்க்க காட்டு மிராண்டி செய்கைகளை பொலிசும் உளவுத் துறையும் செய்து வருகின்றது. திடீர் கைது இரகசிய சித்தி-வதை கூட சித்திரவதை, கேள்வியற்ற தேசிய பாதுகாப்பு சட்டம் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தி / பயங்கரவாத தடை சட்டம் இவற்றைப் பயன்படுத்தி சிறையில் அடைப்பதன் மூலம் பெருந்திரளான மக்களையும் தமிழக சிந்தனை கொண்டவர்களையும் போராட்ட ஆதரவு சக்திகளையும் மிலேச்சத்தனமாக அச்சுறுத்தி வருகின்றது. தமிழீழ அகதிகள், போராளிகள் மீது நடத்தப்படும் இவ்வடக்குமுறையானது இயக்கத்தின் சுதந்திரம் மீது பற்றுக் கொண்ட அகதிகளையும் இன்று உண்மையில் அகதியாக வரும் முன்னாள் போராளிகளையும் சிறப்பு முகாம்களில் உள்ள போராளிகளையும் இவற்றைத் தாண்டி வெளியில் இருக்கும் தமிழீழத்தவர்கள் போராளிகள் என அனைவரையும் நேரடியான அரச கண்காணிப்புக்குள் கொண்டு வருவது 'இந்தி' நடுவண் அரசை எதிர்த்து நிற்கும் இந்திய மக்களின் பக்கம் நிற்பவர்களை தண்டனைக்குள்ளாக்குவது. இவ்வடக்குமுறைகளை தாண்டி நிற்கும் போராளிகளை சல்லடை போட்டு தேடிக் கண்டு பிடித்து நாடு கடத்துவது இவற்றின் வழியாக இலங்கை இந்திய அரசுகளை

படிப்பகம்

www.padippakam.com



எதிர்த்துக் கொண்டு முன்னேறும் தமிழீழ மக்களின் சுதந்திரப் போராட்டத்தை நசுக்குவது, அதற்காக உழைக்கும் போராளிகளை அழிப்பது, இந்திய மக்களிடம் இருந்து கிடைக்கும் பின்புல ஆதரவை அழிப்பது.

இத் தகைய தீய நோக்கம் கொண்ட மக்கள் எதிர்ப்பு வேலையை இந்தியரசும் அதிகார வர்க்கமும் இலகுவில் செய்ய அகதிகள், போராளிகள் முகாம்களுக்கு வெளியிலுள்ள தமிழர்கள் மத்தியில் இருக்கும் இனத் துரோகிகள், மக்கள் விரோதிகள், காட்டிக் கொடுப்பாளர்கள் துணை புரிந்து வருகின்றனர். இவர்களுக்கு உணவு, பாதுகாப்பு, இருப்பிடம் சுக போகவசதிகள், தமிழீழ தேசிய விரோத சிந்தனைகள் என நல்வழியிலே உளவுத் துறை கவனித்து வருகிறது.

அடுத்து ராஜீவ் கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதால் மற்ற இயக்கத்தவர்களை விட புலி இயக்கத்தவர்கள், அவர்களுக்கு ஆதரவான தமிழீழத்தவர்கள் மேல் அரசினதும் பொலிசாரினதும் தேடல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவர்களைக் குறிவைத் தேடுதல் வேட்டை தொடர்கின்றது. இதன் அர்த்தம் மற்ற இயக்கப் போராளிகளும் ஆதரவாளர்களும் சுதந்திரமாக விடப்பட்டுள்ளார்கள் என்பதில்லை. சிலர் இவ்வாறு அர்த்தம் கொள்வது தவறானது. அனைத்துப் போராளிகளும் பொது நெருக்கடிக்குள்ளும், பதிவு மூலம் நேரடி கண்காணிப்புக்கும், பதிவு செய்யாதவர்கள் அகப்படும் போது சிறப்பு முகாம்களுக்கும் அனுப்பப்படுகின்றனர். சிறப்பு முகாம்களின் ஒவ்வொரு போராளியின் தனித் தன்மையும் பார்க்கப்படுகிறது. தொடர்ந்து போராட்டக் குண நலன் கொண்டவர்கள் பிரிக்கப்பட்டு விசேட அடக்கு முறைக்குள்ளாக்கப் படுகின்றனர். அண்மைய செய்திப்படி புலிகள் இயக்கத்தவர்கள் ஆதரவாளர்கள் 500 பேரும் மற்றைய இயக்கங்களின் போர்க் குணம் கொண்ட போராளிகள் ஆதரவாளர்கள் 2000 பேரும் உடனடியாக நாடுகடத்தப்படும் திட்டத்தில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களைப் பற்றிய முழுவிபரங்களும் இலங்கை அரசுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பது கவனத்திற்குரியது. இந்தியாவில் புலிகள் இயக்கத்தவரின் அரசியல் அமைப்பு ஒழுங்கு முறைகள் பெரும்பாலும் பணத்தை வாரி வழங்குவதன் மூலம் எதையும் சாதிக்கலாம் என்ற தவறான சித்தாந்த வழியிலேயே இருந்து வந்திருக்கின்றது. இதை அவர்கள் திருத்திக் கொள்ள முயற்சிப்பதற்குள்ளாக (திருந்துவார்களா என்பது ?) பலர் கைது செய்யப்பட்டு விடலாம் அல்லது புலிகளின் தலைமை தத்துவப்படி "எதிரியைக் கொல் அல்லது உன்னை நீயே கொல்" சயனைட் விஷம் அருந்தி இறந்து விடுவார்கள் என்றே எதிர்பார்க்க முடியும்.

இனி தமிழீழ இயக்கப் போராளிகளுக்கு உதவி செய்தும் ஆதரித்தும் வந்த இந்திய விசேடமாக தமிழ்நாட்டு சக்திகளையும் அவர் முகம் கொண்டுள்ள நெருக்கடிகளையும் பார்க்கின், இங்கும் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து உதவி செய்து வந்தவர்களை பிரதான குறியாக வைத்து மத்திய—மாநில அரசும் அதிகார வர்க்கமும் தாக்குகிறது.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை உணர்வு ரீதியாகப் புரிந்து பல காரணங்களால் விடுதலைப் புலிகளின் போராட்ட மார்க்கத்தை ஏற்று ஆதரவும் உதவியும் கொடுத்து வந்த திராவிட இயக்க அரசியலும் பெரியார் பாதையும் கொண்டவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



இவர்கள் தமிழீழ மக்களின் போராட்டத்திற்கு உதவுவதுடன் தமது சுதந்திர தமிழ்நாட்டுச் சிந்தனைகளிலும் கவனம் செலுத்தியவர்கள். இவர்கள் நேர்மையான விடுதலையுணர்வுள்ள போராட்ட ஆதரவாளர்கள். கொண்ட கொள்கைக்காக நிற்கக்கூடியவர்கள். புலிகளின் பணத்துக்கின்றி போராட்ட தியாகங்களுக்காக தமது சிந்தனை திறனுக்கு ஒப்ப இறுதிவரை உதவிக் கொண்டிருந்தவர்கள். இத்தகையவர்களைத் தான் இன்று தமிழ் நாட்டில் அரசின் கடுமையான கண்காணிப்புக்கு, தேடல் வேட்டை, கைது, சித்திரவதை சிறை வாழ்வுக்கு முகம் கொடுப்பவர்கள். கொடுக்க வேண்டியுள்ளவர்கள் இவர்கள் எல்லோரையும் வேகமாக வளைத்து பிடிப்பதில் அதிகார வர்க்கம் அக்கறையுடன் செயல்படுகிறது. இவர்கள் இன்றைய நிலையில் மாநில அரசு பற்றிய பார்வை, அதிகார வர்க்க அடக்குமுறை வழிகள் தமது சுதந்திர தமிழ்நாட்டு கோரிக்கையின் அரசியல், அமைப்பு கொள்கைகளில் தேவைப்படும் விரிந்த சமூகப்பார்வையின் அவசியம், தற்காப்பு நிலை குறித்து சிந்திக்க வேண்டிய சூழ்நிலைக்கு வந்துவிட்டுள்ளனர். அத்துடன் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் புதிய பரிமாணங்கள், புரட்சிகர உணர்வுள்ள மக்கள் இயக்கத்தின் தலைமைதாங்குதல் தேவை, அதை ஒட்டிய செயல்கள் ஆதரவுகள் பற்றியும் சிந்தித்தாகவேண்டியுள்ளனர். அதேபோல் புலிகள் இயக்கம் தவிர மற்றைய இயக்கங்களுக்கு போராளிகளுக்கு கொள்கையுணர்வு, விடுதலைத்தாகத்திலிருந்து உதவிவந்த தமிழ்நாட்டு ஆதரவு சக்திகள் அரசின்தேடல், கைது சித்திரவதை போன்ற அரசு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்காத போதும் கண்காணிக்கப்படுகிறார்கள் எனவே அவர்கள் நேரடி நெருக்குதலற்ற இந்த சூழலில் அவசியமான சமூகப் பிரச்சனைகள் செயற்பாடுகள் மீது தங்கள் சிந்தனையையும் செயற்திறனையும் கூர்மைப் படுத்துவது மிக அவசியமானது. என நாங்கள் சகோதர உணர்வுடன் கேட்டுக் கொள்கிறோம். தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு சுயநல நோக்கில் ஆதரவு உதவி வந்த தமிழ்நாட்டு சக்திகளில் ஒரு பகுதி விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள். இன்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். [தங்கள் சுயநல தேவைகளுக்காக மற்றைய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டுள்ளனர். ஆனால் அரசின் நெருக்கடிகளில் இருந்து தப்பித்துக் கொண்டுள்ளவர்களையும்] நாம் காணத்தவறக் கூடாது இன்னும், இவர்களில் சிலர் தமிழீழப் போராட்டத்தையும் போராளிகளையும் தூற்றிக் கொண்டிருப்பதையும் அரசுடன் வேகமாக சேர்ந்து காட்டிக் கொடுப்பதையும், அவர்களின் கழிசடை அரசியல், பொருளியல் வியாபாரத்தில் காட்டிக் கொடுத்து தப்ப முயற்சிப்பதையும் தமிழீழ மக்களும் தமிழ்நாட்டு மக்களும் ஊன்றிக் கவனிக்க தொடங்கியுள்ளனர்.

இந்த சுயநலவாதிகள் கூட்டம் தமிழீழப் போராட்டத்திற்கும் இயக்கங்களுக்கும் ஆதரவு தெரிவித்து உதவத் தொடங்கியதே அரசியல் இலாபம் பொருளியல் திரட்சி, சமூக அந்தஸ்த்து, கறுப்பு தொழில் வளர்ச்சி என்ற நோக்கில் இருந்து தான். இவர்கள் வசதிப்படி இலாபம் அதிகளவில் கிடைக்க கூடிய இயக்கத்துடனேயே தொடர்பை ஏற்படுத்தினர். தமிழீழ இயக்கத் தலைமைகளும் சிறந்த சமூக அந்தஸ்த்துக்காரர்களின்

படிப்பகம்

www.padippakam.com

பக்கபலத்திற்கும் அரசியல் உத்திரவாதங்கள் அதிகார வர்க்கத்தின ருக்கும் குறுக்கு வழியிலான இயக்க நிதித்திரட்டலுக்கும் மொத்தத்தில் தலைமைகளின் குறுக்கு வழியிலான வளர்ச்சி, ஆதிக்கப் போட்டி பயன்படுத்தும் அரசியல் பிழைப்பு சிந்தனைகளில் இருந்து இத்தீயசக் சக்திகளிடம் உறவைப் பலமாக வைத்திருந்தனர். இத்தீய வர்களோ இயக்கத்தலைமைகளுடனான தொடர்பையும் போராட்ட ஆதரவு மூலம் பெரிய மனிதராக காட்டி லட்சக் கணக்கில் கோடிக் கணக்கில் சம்பாதித்துக் கொண்டனர். இயக்கத் தலைமைகளுடன் தாபதிகள் முறையிலான உயர்ந்த உறவை கொண்டிருந்தனர். இயக் கத்தலைமைகளும் சிலக்குத் தேவையானவற்றை இவர்களூடாகப் பெற்றுக் கொண்டிருந்தனர் என்பது இயக்கத் தலைமைகளின் வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

ராஜீவ் கொலைக்குப் பின்னர் புலிகள் இயக் கத்தினருடன் தொடர்புள்ள இந்த தீய சக்திகளின் தொடர்பு துண்டிப்பதன் மூலம் புலிகளின் நிதியாதாரம் மற்றும் பின்னணி அரசியல் தொடர்பை அறுத்து நிர்ப்பந்தம் கொடுப்பதற்கு இந்திய நடுவண் அரசும் உளவுத் துறையும் முன் வந்தது. இதன்படி சில தீய நபர்களை பிடித்துக் கொள்வதும் சிவராசன் சுபாவுக்கு தங்க இடம் கொடுத்த வர்கள் என்று காட்டி அவர்களை ராஜீவ் கொலைப் பின்னணியில் பொருத்துவதும் அவர்கள் புலிகள் இயக்கத் தலைமையுடன் தொடர்பு வைத்து பணம் குவித்த வரலாற்றையும் செய்தித் தொடர்பு சாதனங் கள் மூலம் பிரசித்தமாக்கி வருகின்றது. தமிழீழப் போராளிகள் மீது இந்திய மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்த 'தங்கப் புதையல்', 'ஆயுதப் புதை யல்களை' வெட்டிக் காண்பிக்கின்றனர். போராளிகள் என்றால் இத் தில்லுமுல்லர்கள் சமூக விரோதிகளுடன் தொடர்பு கொண்டவர்கள்தான் என நிறுவிக்க படாதபாடு படுகிறது மாநில - மத்திய அரசும் அதிகார வர்க்கமும். உள்ளார்ந்து உண்மையைப் பார்த்தால் புலிகள் உட்பட தமிழீழ இயக்க தலைமையுடன் தொடர்புள்ள மோசடி தீய சமூக சக்திகள் இந்தியாவில் இரண்டு அரங்கில் இருக்கிறார்கள். (1) அரசியல் கட்சிகளிலும், இந்திய பாராளுமன்ற சட்ட மன்றங்களிலும் பிரதிநிதியாக இருந்தும் வருகின்ற சக்திகள். இரண்டு வெளிப்படையாகக் கடத்தல் தொழில், தனிப்பட்ட தொழில்களில் இருந்தும். இவ்விரண்டு அரங்கிலுள்ளவர்களிலும், அரசியல் கட்சிகளில் உள்ளவர்கள், பாரா ளுமன்றம் / சட்டமன்றம் போன்றவற்றில் உள்ளவர்களை விட்டுவிட்டு (ஆளும்கட்சி எதிர்கட்சிகளில் உள்ளவர்கள்) முக்கியமாக வெளிப்படை கடத்தல் தொழில் பேர்வழிகளை கைது செய்து அவர்களது இயக்க தொடர்புகளை பணம் குவித்த வழிகளை அம்பலப்படுத் துகிறது' அதிகார வர்க்கம் இதனை அரசநோக்கம் என்னவெனில் அரசியல் கட்சி களில் உள்ளவர்களை கைது செய்து அம்பலப்படுத்தினால் இந்திய - மாநில - மத்தியஅரசுகளும் அதன் ஆளும் அரசியல் கட்சிகளின் லஞ்சம் ஊழல்கள் மீது மக்களுக்குள்ள வெறுப்புடன் இவ்வாறு தமிழீழப் போராட்டத்தை காட்டி கோடிக் கணக்கில் சொத்து சேர்த்த துரோகத் தை இனப்பற்று குறித்த பொய்மைகளை மக்களால் கண்டு கொள்ளப் படும், எதிர்க்கப்படும் இதன் விளைவாக இந்திய ஆளும் வர்க்கங்கள் மீது மக்கள் தீராத வெறுப்புக் கொள்வர்.

படிப்பகம்

தங்கள் ஆட்சியதிகாரம் ஆட்டங்காணும் என்ற உண்மையுடன் இது செய்யப்படுகிறது.

இப்போதாவது சிந்தியுங்கள் தமிழீழ இயக்கத் தலைமைகளே!, குறிப்பாக புலிகளே! இந்திய மாநில - மத்தியரசும் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் எப்படி உங்களுக்குள்ளாகவேயிருந்து உங்களுடன் வாழ்ந்து வளர்ந்து கொண்டது. இன்றும் உங்களை மட்டுமின்றி தமிழீழ மக்களின் தியாகம் நிறைந்த போராட்டத்தையே, அதன் தார்மீக நியாயத்தையே கொச்சைப்படுத்தி இந்திய தமிழ்நாட்டு மக்களிடமிருந்து அந்நியப்படுத்தியுள்ளனர். இந்த ஏழு ஆண்டுகளில் எல்லாவற்றையும் விட்டு சிதறடிப்பதற்காகத்தான் இந்தியரசும் அரசியல்வாதிகளும் உதவினர். இதைக் கண்டு நீங்கள் இவர்கள் பக்கம் ஆளுக்கொரு தலைமையுடன் முன்பு மண்டியிட்டீர்கள் (பயன்படுத்தி) அது பற்றிப் பேசும் அறிவாளிகளே!, இன்றைய நிலையைப் பற்றி என்ன சொல்கிறீர்கள். உங்களையுமல்லவா பயன்படுத்தி விட்டது இந்தியரசு,

ராஜீவ் கொலையில் தமிழ்நாட்டு கொடியவர்களை தண்டிக்கும் என்ற கட்டத்தில் கூறனை கைது செய்து சித்திரவதைப்படுத்தி புலிகள் இயக்கத்தையும் தொடர்புபடுத்தியதுடன் தமிழீழ மக்களையும் போராளிகளையும் போராட்டத்தையும் கொச்சைப் படுத்தி வரும் "இந்தியரசியல்வாதிகளே!, ஏழ்கிவரும் முதலாளித்துவ அறிவுசார்ந்தவர்களே! நீங்கள், 1987க்கு முன்னால் உங்கள் தலைவர்கள் தமிழீழ இயக்கத் தலைமைகளுடன் கொண்டிருந்த கள்ள உறவை நினைத்துப் பாருங்கள்! உங்கள் அன்னை இந்திராவும் புதல்வன் ராஜீவும், தெய்வம் எம்.ஜி. ஆரும் புலிகள் இயக்கம் உட்பட தமிழீழ இயக்கத் தலைமைகளுடன் தொடர்பு வைத்து ஆதரவும் உதவியும் செய்யவில்லையா? ஆயுத பயிற்சி கொடுத்தார்கள், முகாம் அமைத்துக் கொடுத்தனர், கோடிக்கணக்கில் பணம் வழங்கினர். தமிழீழத்தில் சதி செய்ய. அப்பாவி சிங்கள மக்களை கொலை செய்ய ஆயுதம் வழங்கினார்கள். எம்.ஜி.ஆர் - புலிகளுடன் பங்கு போட்டு ஒரு பெரும் கப்பல் வாங்கி சர்வதேச கடத்தலில் ஈடுபட்டார். இந்த தலைவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டங்கள் எல்லாவற்றிலும் வழக்குப் போட்டிருக்கலாம் அல்லவா? சிறப்புப் புலனாய்வு பிரிவும் அதிகாரவர்க்கமும் அவர்களை கைது செய்து சித்திரவதை செய்து இருக்கலாம் அல்லவா? கடைசியில் கொலை கூட செய்திருக்கலாம். இதையெல்லாம் இந்திய குற்றவியல் சட்டமும் நீதிமன்றங்களும் அதை கட்டிக் காக்கும் நீங்களும் செய்யமாட்டீர்கள். அனுமதிக்கமாட்டீர்கள். காரணம் அந்த மகா ஊழல் காரர்களும் மக்கள் விரோதிகளும், கொலைகாரர்களும் இந்திய பாராளுமன்ற போலி ஜனநாயகத்தை கட்டிக் காத்த தலைவர்கள் (இந்திய) விரிவாதிக்கத்திற்காக தங்கள் சுயநல ஆட்சியதிகாரத்திற்காக இத்தகைய குற்றங்களை (தார்மீக உதவிகளை) செய்தவர்கள் என்பதால் மறந்தும் இதை நினைக்கமாட்டீர்கள். அந்த அரசியல் தெய்வங்களையும் உங்களையும் இனியும் மக்கள் மன்னிக்கமாட்டார்கள். அவர்கள் விழித்தெழுந்து விட்டார்கள். குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கும் தண்டனை வழங்குவார்கள் என்பது நிச்சயம்.

ராஜீவ் கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து PLOT, TELO, EPRLF, ENDLF, EPDP போன்ற இயக்கத் தலைமைகள்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

இலங்கை - இந்தியரசுகளுக்குப் பின்னால் இருக்கும் அமெரிக்க - ருசிய ஏகாதிபத்தியங்களும் எமது எதிரிகள் என்பதில் சந்தேகமில்லை. எனவே
தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை தொடர, வெல்ல இலங்கை இனவாத அரசுக்கு எதிரான மலையக மக்கள், சிங்கள மக்களது போராட்டத்துடன் ஒன்றுபட வேண்டும். இந்திய விர்வாதிக்க அரசுக்கு எதிரான தெற்காசிய நாடுகளின் மக்களுடன் கைகோர்ப்போம். அமெரிக்க - ருசிய வல்லரசுகளுக்கெதிரான உலக மக்களுடன் ஒன்றிணைந்து நிற்போம்.

— பூங்குயிலன் —

---

"பல்வேறு இயக்கங்களும் இடங்களை கண்ட விதத்தில் உரிமையாக்கியதையும் தேவையில்லாது துப்பாக்கி சுகதும் பயன்படுத்தியதையும் கண்டு வெறுப்படைந்த மக்களுக்கு இன்று L.T.T.E யின் நடவடிக்கைகள் சில உண்மைகளை வெளிக்கொணர்கிறது. மிகவும் சொகுசான மாடிகளை (தண்ணீர் பைப், மின்சாரம், வாகனநிறுத்துமிட வசதிகளுடன்) தெரிந்தெடுத்து அதன்முன் தமது வாகனங்களை நிறுத்தி "காம்ப்" (Camp) இருக்கும் இடங்களை மிக சன நெருக்கமான இடத்தில் அமைத்து மக்களை தடுப்புக்காக (Buffer) பாவிக்கும் இவர்களது மனோபாவம் மேலும் விசித்திரமானது. மேலும் முக்கியமாக ஆலயங்கள், மற்றும் பாடசாலைகளை அண்மித்து "காம்ப்" அமைப்பதின் மூலம் சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாடான? செயற்பாட்டில் மறைமுகமாக நம்பிக்கை வைத்துள்ளனரா? அல்லது அவற்றைப் பின்னர் பிரச்சாரத்திற்கு பாவிக்கலாம் என சிந்திக்கிறார்களா புலிகள்."

— 1987 இல் செய்யப்பட்ட திறனாய்வுத் தொகுப்பான "புதிய சமுதாயம்" வெளியீட்டின் குறிப்பு பகுதியிலிருந்து —

"மனிதனின் இலட்சியம் நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்வதே. அதைவிட்டு அவனது இயற்கையான எண்ணங்களுக்கு எதிராக தற்கொலை செய்து கொள்ளக் கூடாது. தற்கொலை என்பது சமுதாயத்தின் மீது கொண்ட அனைத்து நம்பிக்கைகளிலும் ஏமாற்றம் ஏற்படும் போது ஏற்படும் ஓர் உந்துதல் தானே தவிர வேறல்ல. எனவே சமுதாயத்தின் மீது இழந்த நம்பிக்கையை மீண்டும் நாம் பெற நல்லதொரு சமுதாயத்தை கட்டும் போராட்டத்தில் நாம் மரணம் அடைந்து விட்டால் கூட, கவலைப்பட வேண்டியதில்லை. நமது போராட்டம் வெற்றி பெறுவதற்காக நமது மரணம் பயன்படட்டும்.

— தோழர் லெனின் —

படிப்பகம்

www.padippakam.com

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட [illegible] போதா தென்று, இந்திய ஆக்கிரமிப்பு படைகளுடன் சேர்ந்தும் தனியாகவும் செய்த கொடூர செயல்கள் போதாதென்று, இன்று இலங்கை அரசு இனவாத படைகளுடன் சேர்ந்து நடத்தும் [illegible] கொலைகளின் உச்சத்தில் இந்திய-மாநில மத்தியரசும் அரசியல்வாதிகளும் தமிழீழ அகதிகள், போராளிகள், ஆதரவாளர்கள் மேல் நடத்தி வரும் அடக்கு முறைகள், காட்டிக் கொடுப்புகள் ஏற்றுக் கொண்டுள்ளதும் உடந்தையாக இருப்பதும் அவர்களது துரோக நிலைப்பாட்டின் வெளிப்பாடுகளாகும். புலிகள் இயக்கத்தைப் படியாகிலும் யாருடன் சேர்ந்தாவது பலவீனப்படுத்தி அழிக்கவேண்டும் என கங்கணம் கட்டி நிற்கின்றனர். பாசிஸ்ட் ராஜீவ் காந்தியின் இந்திய விரி வாதிக்க கனவுகளை இலங்கையில் நனவாக்க இத்துரோகத் தலைமைகள் சபதம் ஏற்றுள்ளனர். இது இத்தலைமைகளை மேலும் தமிழீழ-தமிழ்நாட்டு மக்களிடமிருந்து அந்நியப்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. புலிகளின் தனி இயக்க சர்வாதிகாரத்தை - சகஇயக்க அழிப்பை - ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்ப்பது, போராட்டகள நடவடிக்கைகளில் போரா ட்ட முன்னேற்றத்திற்கு பாதகமான விடயங்களை விமர்சிப்பது ஒவ்வொரு தமிழீழ குடிமகனின் கடமையுமாகும். ஆனால் இத்துரோக தலைமைகளோ தங் களது மக்கள் விரோத, ஜனநாயக மறுப்பு நடத்தைகளை உள்ளியக்க-சக இயக்க கொலைகளை மறைக்கவும் மக்களுடன் உண்மையாக அவர்கள் மத்தியில் வாழ்ந்து புலிகள் இயக்கத்தின் எதேச்சாதிகாரத்தை எதிர்க்க முடியாத நிலையில் தமிழீழ மக்களிடம் அந்நியப்பட்டுள்ளனர். புலிகளை எதிர்க்கவும் அழிக்கவும் இலங்கை அரசு படைகளுடன் சேர்ந்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அதேபோல அப்பட்டமாக இந்திய விரி வாதிக்க அரசுடன் சேர்ந்துள்ளனர்.

இந்தப் பிற்போக்கு தலைமைகளுடன் ஏதோ காரணங்களால் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கும் போராளி களே! நீங்கள் இனியும் இந்த துரோக தலைமைகளை நம்பி இருக்க முடியாது. உங்கள் தலைமைகளை விட்டு வெளியேறுங்கள் சரியான புரட்சிகர தேசபக்த இயக்கத்தை நோக்கி திரும்புங்கள் (புலிகள் இயக்கத் தை நோக்கியல்ல)


தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட் டத்தை எந்த சிறு குழுவினரிய அந்த இராணுவ இயக்கத் தலைமைகளா வும் இனி வெற்றியை நோக்கி முன்னெடுக்க முடியாது. ஆகவே இத் தலைமை களை நிராகரிப்பதை விட வேறுவழியில்லை என்ற மனநிலையில் உறுதி பெற்று வருகிறார்கள். தமிழீழ மக்கள். மக்களுடன் மக்களாக வாழ்ந்து மக்களை தயார்படுத்தி, அவர்களின் பங்களிப்புடன் தமிழீழ தேசிய சுயநிர்ணய உரிமையையும் சுதந்திர சமத்துவ வாழ்வையும் பெற போராடக் கூடிய ஒரு உழைக்கும் மக்கள் இயக்கத்தின் தேவையை தமிழீழ மக்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இறுதியாக தமிழீழ மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தின் இன்றைய தேக்க நிலையை பற்றி சிந்திப்பவர் களே! போராட்டத்தை தொடர விரும்பும் சக்திகளே! தமிழீழ மக்க ளுக்கு இலங்கை, சிங்கள பௌத்த பேரினவாத அரசபடைகளுந் தான் நேரடியான எதிரி என்பதுடன், இந்திய விரிவாதிக்க அரசும், இவ் அரசுகளுடன் சேர்ந்து நிற்கும் துரோக தமிழீழ இயக்கத் தலைமை களும் எமக்கு எதிரிகளே என்பது கடந்த பத்தாண்டு கால போராட்ட அனுபவத்தில் இருந்து ஐயமின்றி கண்டு கொள்ள முடிகிறது!

படிப்பகம்

www.tamilarangam.net

ராஜீவ் காந்தியின் உடலல்ல இது!



படிப்போம்! **"நவசகாப்தம்"**

பண்படுத்துவோம்!

**"தமிழீழ மக்களின் புதிய சகாப்த போர்ப்பாதையை"**

பங்குகொள்வோம்!

**"ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிப் போராட்டத்தில்"**

"நவசகாப்தம்"
அதிகார பூர்வ வெளியீடு
பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்

1987ல் ராஜீவ் - ஜெ. இலங்கை ஒப்பந்தத்தின் பின் இந்திய ஆக்கிரமிப்புப் படை 'வல்வைப் படுகொலை' நடத்திய போது தமிழீழ பச்சிளம் சிறுவனும், அவனது தாய் தந்தையரும் குடும்பமாக கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர். பாசிச ராஜீவின் அமைதிப்படை அக்குடும்ப தலைவனான கதிரேசனை மரம் ஒன்றுடன் கட்டி வெடி குண்டை இணைத்து வெடிக்க வைத்து வேடிக்கை பார்த்தது.

IPKF

1989 ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2,3,4ம் திகதிகளில் 63 உயிர்களைக் கொன்றும், அப்பாவி பெண்களை பாலியல் பலாத்காரப் படுத்தியும் (கற்பழிப்பு) 123 வீடுகளை எரித்து நாசமாக்கியும் 50 போக்குவரத்து வாகனங்களையும், 12 மீன்பிடி இயந்திரப் படகுகளையும், 176 மீன்பிடி வலைகளையும் எரித்து நாசமாக்கிய இந்திய இராணுவம், 3 நாட்களாக ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தி அந்த எழில் நிறைந்த நகரத்தையே சுடுகாடாக்கியது.

உலகத்தையே கதிகலங்க வைத்த தமிழீழ மக்கள் மீதான இந்திய ஆக்கிரமிப்பும், வல்வைப் படுகொலையும் அதன் பின்னணியில் நின்ற இந்திய ஜனநாயகத்தின் அரசியல்வாதிகளின் முகத்திரை விலகும் நாளும் வெகு தூரத்தில் இல்லை. ஆம்...... "சத்தியமே ஜெயம்" என்ற முத்திரை பதித்தவர்கள் இன்று வெட்கம் கலைந்த நிலையில் நியாயம் கூற முடியாத நிலை குலைந்து நிற்கின்றனர்.

'சரித்திரம் ஒரு போதும் பின்நோக்கிப் பாய்வதில்லை' ஆனால் ஆதிக்க வெறிபிடித்த ஒவ்வொரு நாடுகளும் போட்டி போட்டு இந்த உலகை அழிவின் விளிம்பிற்கே கொண்டு செல்கின்றனர். இதற்கு இந்தியாவும் விதிவிலக்கில்லை.

www.padippakam.com

தமிழீழத்தில் தர்மத்திற்கெதிராக இந்தியஅரசு நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தம் சான்றாகும். ஆம்.----

"பிரித்தானியாவுக்கு இந்தியாவில் ஒரு ஜாலியன் வாலா பாக் படுகொலை! அமெரிக்காவிற்கு வியட்நாமில் ஒரு மைலாய்ப் படுகொலை! இந்தியாவிற்கு இலங்கையில் ஒரு வல்வைப் படுகொலை! (வல்வைப் படுகொலை பக்.4)

உலக வரலாற்றில் அநாகரீகமான இந்த வல்வைப் படுகொலையை நடத்துவதற்கு இந்திய ஆக்கிரமிப்புப் படைக்குத் தலைமை தாங்கியவன் ஏ.எஸ். கல்கத், இந்திய திரிவாதிக்க அரசிற்கு தலைமை தாங்கியவன் பாசிச ராஜீவ் காந்தி என்பது தான் வரலாறு.

பாசிச ராஜீவின் அகால மரணம் இந்திய ஆளும் வர்க்கத்தையும் தெற்காசிய இனவெறி, மதவெறி இராணுவ சர்வாதிகார வெறி தலைவர்களையும் இந்நாடுகளின் சோசலிச திரிபுவாதிகளையும் நடுநடுங்க வைத்திருக்கின்றது. ஆளும் வர்க்கங்களுக்கு சார்பான எல்லா தொடர்பு சாதனங்களும், அறிவு ? ஜீவிகளும் தொண்டை கிழியும் வரை ஓலமிட்டு வருகிறார்கள். இந்திய மக்களும் உலக மக்களும் நல்லதொரு தலைவனை இழந்துவிட்டதாக காட்டி மக்களின் மனிதாபிமான மேலெழுந்த உணர்வுகளை தமக்குச் சாதகமாகத் தூண்டி முதலாளி வர்க்கத்தையும் அதனை ஒட்டு கெட்ட ஓட்டுப் பெட்டி வன்முறை அரசியலையும் காக்கும் வண்ணம் அனுதாப அலையை முடுக்கி விடுகிறார்கள். இது பொய் --- பொய்

"உண்மை --- உண்மை. இந்திய முதலாளிகளுக்கும் ஆளும் அதிகார வர்க்கமும் உலக பிற்போக்காளர்களும் தேசிய இன ஒடுக்கு முறையாளர்களும் காந்திய பரம்பரை ஆட்சிநிலையான ஆட்சி என "பல வித்தை விளையாட்டு" காட்டக் கூடிய ஒரு தலைவனை இழந்து நிற்கிறார்கள் என்பதே உண்மை. அத்துடன் சமூக, பொருளாதார விடுதலைக்கும், தேசிய இன விடுதலைக்குமாக போராடும் இந்திய மக்களும், உலக முற்போக்கு மக்களும் ஒரு பாசிஸ்ட்டு, கொலைவெறியன், பிராந்திய திரிவாதிக்கவாதி, மகா ஊழல் மன்னன் அழிந்து விட்டான் என்று கருதுவது தான் உண்மையாகும்.

மக்களின் தினசரி வாழ்விலும், அவர்களினது உரிமைப் போராட்டங்கள் மீதும் பல தரப்பட்ட தளங்களிலும் பாசிஸ்டுக்கள் ஓர்க்கத் திமிராக நடத்தும் அரச பயங்கரவாதமும் அடக்கு முறைகளும் மக்களை பல விதமான எதிர்நடவடிக்கைகளுக்கு தூண்டி இருக்கிறது. இது சில சமயங்களில் பாசிசத் தலைவர்களது உயிரை அழித்து உடலைச் சிதைக்கும் செயலாகவும் வெளிப்படுவது வரலாற்றிற்கு புதியதல்ல. ராஜீவின் அழிவும் இதனையே நிரூபிக்கின்றது. தெற்காசிய நாடுகளிலுள்ள பாசிஸ்ட்டுக்களை மக்கள் மீண்டும் எச்சரித்து இருக்கின்றார்கள்

1971இல் சிங்கள மக்கள் மீதான சிறிமாவின் படுகொலைக்கு பாசிச இந்திராவின் உடந்தையும், 1987 இல் தமிழீழ மக்கள் மீதான ஜே.ஆரின் இன அழிப்பிற்கு பாசிச ராஜீவின் நேரடிப் பங்கிற்கு பின்பும் தொடர்ந்து தீரமுடன் போராடி வரும் இலங்கை மக்களின் பார்வையில், ராஜீவின் அழிவு உலக வரலாற்றில் சர்வாதிகாரிகளின் இறுதி நிலை இதுதான் என்பதையே காட்டி நிற்கின்றது.

படிப்பகம்